REGD| M| 4642

# திராவிடநாடு

விலை அணா 2   ஆண்டுசந்தா ரூ 7   இலங்கை 15 சதம்   மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 27–6–48 | இதழ் 2

## மாறுதல் வேண்டும்

—✻—

"நாட்டுக்கு சுயராஜ்யம் வந்துவிட்ட போதிலும், நாட்டிலே இன்று நடைபெறும் அரசாங்க முறை, ஆங்கிலேயர்களால் வகுக்கப்பட்டுச், சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாக அவர்கள் நலத்தை நாடி நடைபெற்றதைப்போன்றதென்பதை நாம் மறந்துவிடலாகாது. இந்த அரசாங்கமுறை சத்தியத்தையும் தர்மத்தையும் அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. இதில் பொய்யும் புலையும் மலிந்திருக்கிறது. லஞ்சம் தாண்டவம் ஆடுகிறது. அளவுக்கு மிஞ்சிய தாமதமும் இதில் இடம்பெற்றிருக்கிறது. தேசபக்தியோ, தியாக புத்தியோ சுறுசுறுப்போ இந்த அதிகாரிகளில் பெரும்பாலாரிடம் கிடையாது பழைய அன்னிய அரசாங்க முறையே இந்த மனப்பான்மைக்குக் காரணமாகும்."

"லோகோபகாரி."

## யாரோ சிலர்

16-ம் பக்கத் தொடர்ச்சி

லது அவர்களின் போக்கை வேறு வகையில் நினைத்து அழுவதா?

இனி, தாய்மொழியாகிய தமிழைப் படியாதவர்கள் நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்குமேல் காணப்படும் இந்த இரங்கத்தக்க நிலைமையில், இந்தியைக் கட்டாய பாடமாக்குவோம் என்று கங்கணம் கட்டி நிற்கும் தமிழ் மக்கள் சிலரின் ஒரு செயலை நோக்குமிடத்து, அது "தாய் தஞ்சையில் தன் கைப்பிச்சை எடுக்கத், தனயன்குடந்தையில்கோவிலை புரிந்தது" போலுமன்றோ இருக்கிறது. என்னே! இவர்களது அறிவுடைமை! தாய்மொழியை விடுத்துப் பிற மொழி கோடல் பெருமையாகுமா?

பேரியீர்! நம்மை அடுத்த ஆந்திர (தெலுங்கு) நாட்டை நோக்குங்கள். அம்மொழியின் ஆக்கத்தை அறியுங்கள். அவர்களின் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் பாருங்கள். மொழிக்காகச் செய்யும் முயற்சியை நோக்குங்கள். அவர்கள் இப்போது (Andhra University) என்ற பல்கலை கழகம் ஏற்படுத்தி, அதில் தெலுங்கு மொழியைக் கட்டாயக் கல்வியாக வைத்துக் கற்றுத்தேர்ச்சியடைய ஏற்பாடு செய்து வருகிறார்கள். மலையாளத்திலும் (Kerala University) என்ற பல்கலைக் கழகம் ஏற்படுத்தி, மலையாள மொழியையும் நன்கு பயின்று வருகின்றனர். இங்ஙனமே வங்க (Bengal) நாட்டைக் காணுங்கள். அவர்கள் தங்கள் மொழிக்காகக் கைக்கொண்டமுயற்சியைக் கேளுங்கள். வங்க இளைஞர்கள் தாய்மொழியைக் கங்கணம் கட்டிக்கொண்டு காத்தார்கள். உடல், பொருள், உயிர் அனைத்தையும் அந்நாட்டு மக்கள் தங்கள் மொழிக்காகத் துறந்தார்கள். அதனால், அவர்கள் தாய்மொழி சிறப்புற்று இலங்குகிறது; சீர்பெற்றுத் திகழ்கிறது. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" இங்ஙனம் தமிழல்லாத ஒவ்வொரு மொழி பேசுவோரும், தத்தம் மொழிகளையே முதன்மையாக கற்றுத் தேர்ந்து முன்னேற்றமடைய வேண்டுமென்ற பெருமுயற்சி செய்துவர, அவ்வறிவுடையோர்களைப் பார்த்தாயினும் அறிவுபெறாது ஒரு முயற்சியும் இல்லாமல் இந்தியைக் கட்டாய பாடமாக்குவதால் வரும் இன்னல்கள் என்ன? என்று தமிழை இகழ்ந்து பேசிக்கொண்டு வறிதே காலங் கழிக்கும் தோழர் முத்தாரங்கம் அவர்கள் போன்றாரைத் தமிழர் என்று அழைப்பதா? தமிழுக்குக் கேடு சூழும் தமிழ் மொழிப் பகைஞர் என்று அழைப்பதா கூறுமின்கள்! தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றென்பதை உணராது, தான் தோன்றித் தம்பிரான்களாய்த் தடுமாறித் திரியும் தமிழ் மக்கள் சிலரைப் பார்த்து வருந்துவதைவிட வேறு என்ன செய்ய இயலும்!

இனித், தாய்மொழிப்பற்றே தாய்நாட்டுப் பற்றென்பதைநன்குணர்ந்த கவிமன்னராகிய இரவீந்திரநாதர் "கீதாஞ்சலி" என்னும் உலகம் போற்றும் ஒரு நூலை முதல் முதலில் தம் தாய்மொழியாகிய வங்கத்திலன்றோ யாத்தார். உலகமறிந்த பெரியாராகிய பாலகங்காதர திலகர் தாம் அருளிச்செய்த "கீதா ரகசியம்" என்னும் நூலைத் தம் தாய்மொழியாகிய மகாராஷ்டிரத்திலன்றோ வெளியிட்டார். இந்திமொழி இந்தியாவிற்குப்பொது மொழியாக வேண்டுமென்று பாடுபட்டவருள் தலை சிறந்தவரான காந்தியடிகள்தமது "வரலாற்றைத்" தம் தாய்மொழியாகிய கூர்சரத்திலன்றோ எழுதிக்காட்டினார். மேலே குறிப்பிடப்பட்ட மூவரும் ஆங்கிலத்தில் நிரம்பிய புலமை பெற்றவர்கள். அவர்கள் எழுதும் ஆங்கிலத்தின் அழகான நடையை ஆங்கிலேயரே போற்றி மகிழ்கின்றனர். இப்பெரியார்களின் வாழ்வுஞ், செயலும், பிறவும் உலகுக்குஎடுத்துக்காட்டாக (Example) நின்று துணை செய்கின்றன. தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றெனபதை அவர்கள் தெள்ளிதில் உணர்ந்தே தாய்மொழிக்கு ஆக்கந்தேடினார்கள்.

இந்தி மொழியைத் தமிழ்நாட்டில் கட்டாய பாடமாக்கினால் தமிழ் மொழி தன் சிறப்பை இழந்துவிடுமென்பதையும், தமிழ் மக்கள் தம் தாய்மொழியாகிய தமிழை மறந்து விடுவார்கள் என்பதையும், நம் தமிழ்ச் சகோதரர்கள் நன்குணர்ந்து தமிழ்நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் ஆக்கந்தேடுவார்களாக. தமிழரையும், தமிழ் மொழியையும் தாழ்த்தும் பொருட்டும், இந்தி பேசும் நாட்டவரையும் இந்திமொழியையும் உயர்த்துப்பொருட்டும், ஒரு சில சுயநலமிகள் செய்துவரும் சூழ்ச்சிகளை உணராது நம் தமிழ் மக்களிற் பலர் அவற்றை மெய்யெனக்கொண்டு தம்மையும் தம் அருந் தமிழையும் இழிவுபடுத்தி ஐயகோ! ஏமாந்து போகின்றனரே! இனியேனும் அவர்கள் அப்பொய்ம்மையை உணர்ந்து தமக்கும் தம் தாய் மொழிக்கும் ஆக்கந் தேடுவார்களாக.

இப்போது ஆயிரக்கணக்கான வட இந்தியர்கள் தமிழ்நாட்டின் பலபகுதிகளிலும் புகுந்து வாணிகம் முதலிய தொழில்முறைகளினால் பெரும் பொருள் சேர்த்துக் கொண்டு போவது யாவரும் அறிந்ததே. இந்த நிலைமையில் இந்தியும் பொதுமொழியாக மாறிவிட்டால் ஆயிரக்கணக்கானவர்கள் இலட்சக் கணக்காகப் பெருகி வந்து இன்னும் பெரும் ஊதியத்தைப் பெற்றுப்போவதற்கு எளிதாய் இருக்குமென்று நினைக்கிறார்கள்போலும்! ஆம்-ஆம், ஒரு சாரார் நீங்கிவிட்டால், தமிழ் நாட்டவர்கள் வியர்வை வடியத்தேடிய பொருளைக் கவர்ந்து செல்வதற்கு இன்னொரு சாரார் முன் எச்சரிக்கையாகவே "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலேயே கண்" என்ற பழமொழிப்படி அதற்குரிய ஏற்பாடுகள் எல்லாம் செய்ய வேண்டுமல்லவா. தமிழர்கள் ஏமாந்த பேர்வழிகள் என்று அறிந்தவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்!

தமிழ் அன்பர்களே! பொன் விலங்கைக் கழற்றி இருப்பு விலங்கை மாட்டிக்கொள்வது போல ஒரு சாராரின் அடிமைத்தனத்தில் நின்றும் விடுபட்டு, இன்னொரு சாராருக்கு அடிமைத்தனமாகும் "பிறப்புரிமை எங்கள் அடிமைத்தனம்" என்னும் இழிந்தநோக்கத்தைமாற்றி 'நாங்களும் மக்கட் கூட்டத்தவர் தான்—எங்களுக்கும் பகுத்தறிவு இருக்கின்றது—நாங்களும் பிற நாட்டினரைப் போன்று தனித்து நின்று எங்கள் வாழ்க்கையை நடாத்தும் ஆற்றலும் வீரமும் உள்ளவர்கள் தான்—நாங்களும் வட நாட்டில் ஆரிய மன்னரையும் ஒருங்கே கங்கை நதிக்கரையில் புறமுதுகிட்டோடச் செய்த செங்குட்டுவன் பெருமைக்கு உரியராய் அமைந்த தமிழ் வீரர்தான்' என்ற உயர்ந்த நோக்கத்தோடு கூடிய உணர்ச்சி நரம்புகள் தமிழ்ப்பாலுண்ட உங்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

# இலாபத் தொழிலுக்கு இடமில்லை

## ஆராய்ச்சிக்கே முதலிடம்

## சோவியத்தின் இன்றைய திட்டம்

சென்ற வருடம் டிசம்பர் மாதம் சோவியத் அரசாங்கம் தனது கரன்ஸி சட்டத்தை பிரகடனப் படுத்தியபோது அமெரிக்கர்கள், "ருஷியர்கள் பாங்கில் கணக்கு வைத்திருக்கிறார்களா? அவர்கள் கம்யூனிஸ்டுகள் என்றல்லவா நினைத்தோம்" என்று கூறினர்.

சோவியத் யூனியனில் பணவசதியுள்ள ஒரு பிரஜை நாட்டுப்புறத்தில் ஒரு வீட்டையும் நகரத்தில் ஒரு வீட்டையும் பெற்றிருக்கலாம். தமது அறைகொள்ளும் அளவிற்கு உடுப்புகளையும், ஒரு மோட்டார் காரையும் வைத்துக் கொள்ளலாம். அவரது மனைவி பட்டாடைகளை உடுத்திக் கொள்கிறார். அவர் தமக்கு வேண்டிய அளவு குடி வஸ்துக்களை வாங்கிக் கொள்கிறார். அவர் தமது வீட்டைச் சுத்தம் செய்வதற்கும் துணிகளைத் தைப்பதற்கும், கடிதங்களை டைப் அடிப்பதற்கும், உணவுபரிமாறுவதற்கும், காரை ஓட்டுவதற்கும், வேலையாட்களை வைத்துக் கொள்ளலாம். அரசாங்க அங்கீகாரமிருந்தால், அவர் ஒரு சிற்றலை ரேடியோ நிலையம், விஷ மருந்துகள், கடுமையான வெடி மருந்துகள் ஆகியவற்றைக்கூட வைத்திருக்கலாம். அவருக்குச் சொந்தமான சாமான்களும், செக்யூரிட்டிகளும், ராயல்டிகளும் அல்லது ரொக்கமும் வரியின்றி அவரது குடும்பத்திற்கு சேர்கின்றன.

இது முதலாளித்துவ முறை போலத் தோன்றலாம். ஆனால் இது ஒரு விஷயத்தோடு நின்று விடுகிறது. இலாப நோக்கத்திற்கு வேலையாட்களைப் பயன்படுத்திக் கொள்ள சோவியத் சட்டம் இடமளிக்கவில்லை. ஆகவே, செல்வந்தர், விற்பனைக்காக சாமான்கள் செய்வதற்கு வேலையாட்களை வைத்துக் கொள்ளத் தமது பணத்தை உபயோகிக்க முடியாது. அவர் ஒரு தொழிற்சாலையையோ ஒரு பெரிய பண்ணையையோ தமது உடைமையாக வைத்திருக்க முடியாது. அவர் ஒரு வீட்டையோ பல வீடுகளையோ வைத்திருக்கலாம். ஆனால், அவை கட்டப்பட்டிருக்கும் நிலத்தை தமது உடைமையாக பெற்றிருக்க முடியாது. அவர் அதை அரசாங்கத்திடமிருந்து நீண்டகால குத்தகைக்கு வாங்கிக்கொள்ளவேண்டும். அவர் இந்த நிலத்திற்கு கொடுக்கும் வாடகை ஒரு முதலாளித்துவ நாட்டில் ஒருவர் செலுத்தும் வரிகளுக்கு சமமானதாயிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பொதுக்காரியத்துக்காக அரசாங்கம் இந்தக் குத்தகையை ரத்து செய்துவிடலாம். இவ்விதமான கட்டுப்பாடுகள் தவிர, சோவியத் பிரஜை பொருளீட்டுவதற்கு தடை இல்லை. தாம் சம்பாதிக்கும் பணத்தை தமது விருப்பப்படி அவர் செலவு செய்துகொள்ளலாம்.

சோவியத் கம்யூனிஸ்ட் கக்ஷி அங்கத்தினர்களில் சிலர்தான் பணக்காரர்களாயிருக்கின்றனர் என்பதை இங்கு குறிப்பிடவேண்டும். பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்து கொள்வது, சோவியத் தலைவர்கள் குறிப்பிட்ட காரியங்களைச் செய்வதின் காரணமென்ன என்பதை கூட்டுப் பண்ணைக்காரர்களுக்கு அல்லது தொழிற் சங்க அங்கத்தினர்களுக்கு விளக்கிச் சொல்வது, தமது மக்கள் எதை தயக்கமின்றி ஏற்றுக் கொள்வார்கள், எதை அவர்கள் மீது கட்டாயமாய் சுமத்தவேண்டியிருக்கும் என்பதை சோவியத் தலைவர்களுக்கு எடுத்துரைப்பது ஆகியவை ஒரு கம்யூனிஸ்ட் கக்ஷி அங்கத்தினரின் வேலைகளாகும். இவ்வித ஓய்வு ஒழிச்சலற்ற வேலைகளுக்குக் கைமாறாக அவர் அரசியல் துறையில் முன்னேற்றம் அடைவதற்கு சந்தர்ப்பம் பெறுகிறார். சோவியத் கக்ஷி அங்கத்தினர்கள் பொதுவாக மிக்க நேர்மையுடையவர்களாயிருக்கின்றனர். ஆடம்பரத்தைத் தவிர்ப்பதில் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர்.

சமீபத்தில் கரன்ஸி சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து ஏராளமான பணத்திற்குச் சொந்தக்காரர்களாயிருந்த ருஷியர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. பணத்தைக் கட்டிவைத்திருந்தவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்கள் 3000 ரூபிள்களுக்குமேல் தங்களிடமிருந்த பணத்தின் பத்தில் ஒன்பது பகுதியை இழந்துவிட்டனர். அரசாங்கக் கடன்பத்திரங்களை வாங்கிய தேசபக்தர்கள் தங்களுடைய பணத்தின் மூன்றில் இரண்டு பகுதியை இழந்தனர். பாங்கில் பணம் போட்டிருந்தவர்கள், 10000 ரூபிள்களுக்கு மேல் தங்களுக்குச் சொந்தமாயிருந்த பணத்தின் ஒவ்வொரு பழைய இரண்டு ரூபிள்களுக்கும் ஒரு புதுமாதிரி ரூபிள் பெற்றனர். அதுபோல 3000 ரூபிளுக்கும் 10000 ரூபிளுக்குமிடையே ஒவ்வொரு பழைய 3 ரூபிளுக்கும் 2 புதிய ரூபிள் பெற்றனர். ஆனால் ரொக்கம், பாங்கில் போடப்பட்டிருந்த பணம், அரசாங்கக் கடன் பத்திரங்கள் ஆகியவை தவிர, பணக்கார ருஷியரின் இதர உடைமைகள் இச்சட்டத்தினால் பாதிக்கப்படவில்லை. அவருடைய சம்பளம் மாறவில்லை. அவர் ஒரு நூலாசிரியராகவோ அல்லது பாட்டு இயற்றுபவராகவோ இருந்தால் அவருக்கு முன்போலவே ராயல்டிகள் கிடைத்துக் கொண்டிருந்தன. அவரது வீடுகள், உயர்ந்த கம்பளி உடுப்புகள், அவரது மனைவியின் வைர நகைகள் ஆகியவை பாதிக்கப்படவில்லை. கரன்ஸி சட்டத்திற்கு பிறகு அவர் சேமித்த பணத்தின் மதிப்பு அதிகமாயிற்று.

கரன்ஸி சட்டத்தின் விளைவாக ரூபிளின் மதிப்பு உயர்ந்திருக்கிறது. 1947-ம் வருடம் டிசம்பர் மாதத்திற்கு முன் ஒரு ருஷியர் ரேஷனில் மிகக் குறைந்த விலையில் குறிப்பிட்ட அளவுவரை பொருள்களை வாங்க முடிந்தது. ஆனால் அவ்வாறு

வாங்கப்பட்ட சாமான்கள் அத்யாவசியச் சாமான்களாகவே இருந்தன. அவருக்கு அதிகமாகத் தேவைப்பட்டபோது, அவர் சட்டபூர்வமாக அரசாங்கக் கடைகளிலோ அல்லது விவசாயிகளின் மார்க்கட்டுகளிலோ அவற்றை வாங்கிக்கொள்ள முடிந்தது. ஆனால் அவர் கொடுத்த விலை ரேஷன் சாமான்களின் விலையைவிட 3 மடங்கு முதல் 100 மடங்கு வரை அதிகமாயிருந்தது. ஒரு ஏழை ரேஷனில் தனக்குக் கிடைப்பதைவிட அதிகமாக எதுவும் வாங்கிக்கொள்ள முடியவில்லை.

இப்போது ரேஷன்நடைமுறை ரத்தாகிவிட்டதாகையால், பலவிதமாக நிர்ணயிக்கப்பட்டிருந்த விலைகள் இப்போது ஒரே மாதிரியாக மாறிவிட்டன. நிர்ணயமான விலையில் யாரும் தம்மால் முடிந்த அளவு சாமான்களை வாங்கிக் கொள்ளலாம். பெரும்பாலான சாமான்கள் விஷயத்தில் அவற்றின் விலைகள் முன்னைய ரேஷன் விலைக்குக் கொஞ்சம் கூடுதலான அளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஆனால் முன்பு ரேஷனுக்குட்படாதிருந்த பொருள்களின் விலைகளைவிட இந்த விலைகள் மிகக் குறைந்தவையாயிருக்கின்றன. இது பணக்காரர்களுக்குச் சாதகமான நடவடிக்கை என்பது துலக்கம். எனினும் அரிய சமூக சேவைகளுக்காக அதிக சம்பளம் பெற்றுவந்தவர்களில் அநேகர் அதிக ரேஷன் அலவன்ஸ் பெற்றுக் கொள்வது, நியாயமான விலைக்கு நல்ல சாமான்களை வாங்கிக் கொள்வதுபோன்ற தங்களுடைய சலுகைகளை இழந்துவிட்டனர். புதிய நடைமுறை நன்றாய் வேலை செய்வது, சப்ளை எவ்வளவு தூரம் கிடைக்கிறது என்பதையே பொறுத்திருக்கிறது. ரொட்டிக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியை அரசாங்கம் பூர்த்தி செய்ய முடியாவிட்டால் பண்ணைக்காரர்கள் தாங்கள் விரும்பிய விலைக்கே அவற்றை விற்றுவருவார்கள். ஆனால் போதிய பொருள்களை உற்பத்தி செய்ய தங்கள் நாட்டிற்கு சக்தி உண்டு என்று ருஷிய பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

சோவியத் பணக்காரர்களில் ஒரு பிரிவினர் இப்போது தங்கள் வாழ்க்கை முன்னைவிட அதிக கஷ்டமானதாயிருப்பதை உணர்வார்கள். குறிப்பாக விவசாயிகள் பழைய நானாவித விலைத் திட்டத்தினால் பெருக்க அனுகூலமடைந்தனர். அப்போது அவர்களுக்கு தாங்கள் வேலை செய்த கூட்டுப் பண்ணையின் இலாபங்களில் ஒருபங்கு கிடைத்தது. அது தவிர, அவர்கள் தங்களுடைய பிரத்தியேக பண்ணை உற்பத்திகளை பகிரங்க மார்க்கட்டில் பெருத்த இலாபத்திற்கு விற்க முடிந்தது. உதாரணமாக, ஒரு கூட்டுப் பண்ணைக்காரர் 50 லக்ஷம் ரூபிள் மதிப்புள்ள அரசாங்கக்கடன் பத்திரங்களை வாங்கினார். அதற்காக அவரைப் பத்திரிகைகள் பெரிதும் பாராட்டின. நாட்டு மக்கள் நன்றி செலுத்தினர். சமீபத்திய கரன்ஸி சட்டம் அந்தச் செல்வத்தின் பெரும் பகுதியை கரைத்துவிட்டதோடு மட்டுமின்றி, அவர் மேற்கொண்டு பணம் சேர்ப்பதற்குள்ள சாத்தியங்களையும் குறைத்துவிட்டது.

இச்சட்டத்தினால் ஒரு சில சட்ட விரோதமான செல்வ மார்க்கங்கள் மறைந்துவிட்டன. ரேஷன் விலைகளுக்கும் ரேஷனுக்குட்படாத பொருள்களின் விலைகளுக்குமிடையே யிருந்த வித்தியாசம் கொள்ளை இலாபக்காரர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அளித்தது. இவர்களுடைய இந்த நடவடிக்கையை ஒழிப்பதற்காகத்தான் கரன்ஸி சட்டம் பிரதானமாய்க் கொண்டுவரப்பட்டது. "யுத்தத்தின் போது பெரும் பணத்தைத் திரட்டி தங்களை பணக்காரர்களாக்கிக் கொண்ட கொள்ளை இலாபக்காரர்கள், ரேஷன்நடைமுறை ரத்தான பின்னர் பொருட்களை வாங்கிக் குவிப்பதற்கு சந்தர்ப்பம் பெறுவதென்பது சகிக்கொணாததாகும்" என்று சோவியத் அரசாங்கம் கூறியது. யுத்தசேவை செய்த சோவியத் பிரஜைகளுக்கு, அதிக விலைக் கடைகளில் கொள்முதல் செய்யப்படும் சாமான்கள் விஷயத்தில் குறிப்பிட்ட விகிதம் கழிவு தரப்பட்டது. மற்றவர்களுக்குத் தரகர்களாகவிருப்பது அவர்களுக்கு சுலபமாயிருந்தது. நல்ல ரேஷன் அலவன்ஸ் பெற்றவர்கள், தங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த எல்லாப் பொருள்களையும் குறைந்த விலைக்கு வாங்கித் தங்களுக்கு வேண்டாதவற்றைப் பகிரங்க மார்க்கட்டில் விற்றனர்.

ஆனால் ரேஷன் எடுபட்டுவிட்டதிலிருந்து சோவியத் யூனியனில் இலாபமடிக்கும் பழக்கமும் மறைந்துவிட்டது என்று அர்த்தஞ் செய்து கொள்ளக்கூடாது. குறைவான அளவிலிருக்கும் சாமான்கள் விலைக் கட்டுப்பாட்டின்கீழ் விற்கப்படும் போது பிளாக் மார்க்கெட் வியாபாரம் ஓரளவு ஏற்படுமென்பது திண்ணம். சோவியத் யூனியனின் யுத்தகால பிளாக் மார்க்கெட் இதர ஐரோப்பிய நாடுகளின் பிளாக் மார்க்கெட்டுகளைவிட சிறியதாகவேயிருந்தது. ஆனால் ருஷியாவில் பிளாக் மார்க்கெட் இருக்கவே செய்தது; இன்னும் இருந்து வருகிறது.

குடியிருப்பு அறைப்பஞ்சமானது அப்படியேயிருக்கும் ஒரு வீட்டுச் சொந்தக்காரரை மயக்க ஒரு நல்ல சந்தர்ப்பமளிக்கிறது. மாஸ்கோவில் அறைகளுக்கு ஏற்பட்டுள்ள பஞ்சம் நியூயார்க்கில் ஏற்பட்டுள்ளதைவிட 10 மடங்கு அதிகமாயிருப்பதாகத் தெரிகிறது. ஒரு மத்திய வகுப்புக் குடும்பம் ஒரு அறையில் வசிக்கிறது. அந்த அறையின் மத்தியில் சாப்பாட்டு மேஜை இருக்கிறது. சுவரோரத்தில் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. சமையல் ஸ்நான அறைகளின் உபயோகம் பக்கத்திலுள்ள குடும்பங்களோடு பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதனால் ஒரு அறையில் குடியிருப்பவர் பக்கத்து அறையில் உள்ளவர்களோடு நேசபான்மையுடன் நடந்து கொள்கிறார்கள். இளந் தம்பதிகள் இந்த அறைகளில் மறைப்புத்தட்டிகள் வைத்துக்கொள்ளலாம். மாஸ்கோவில் ஜனத்தொகை நெருக்கம் அதிகமாயிருப்பதை அறிந்துள்ள சோவியத் அரசாங்கம் ஒரு பெரியவீடு நிர்மாணத் திட்டத்தைச் செயலுக்கு கொண்டுவரத்தொடங்கியுள்ளது.

அறைகளுக்கு இவ்வளவு கிராக்கி இருக்கிறபோதிலும், வாடகைகள் மிக மிகக் குறைவாகவே யிருக்கின்றன. இதனால் சொற்ப வருமானமுடைய ஒரு குடும்பத்திற்குக் கூட வாடகை விஷயம் அற்பமானதாயிருக்கிறது. கொள்கையளவில் குடியிருப்பு இடமானது மாஸ்கோவில் சட்டபூர்வமாக வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களுக்குச் சலுகை முறைப்படி ஒதுக்கிக்கொடுக்கப்படுகிறது. அநுஷ்டானத்தில் குடியிருப்பவர்களின் [illegible]ரணத்திலோ அல்

(18-ம் பக்கம் பார்க்க)

## பாரோ சிலர்

2-ம் பக்கத் தொடர்ச்சி

உடப்புகளில் ஒட்டிக்கொண்டிருக்குமாயின், இந்திமொழியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று கூச்சலிடுகிறவர்களது சுயநல ஆரவாரத்துக்குத் தக்க அறிவாப்புக் கொடுத்துத் தமிழ் மொழியைக் கட்டாய பாடமாக்கும் பெருமுயற்சியை மேற்கொள்ளுங்கள். இல்லையேல், நீங்கள் உங்கள் வாழ்க்கைக்குப் பின் உங்கள் வழித்தோன்றும் தமிழர்களுக்கு மாபெருங்கேடு ஆக்கி வைத்தவர்களாவீர்கள். அவர்கள் "நாங்கள் தமிழரோ அல்லது வேறு இனத்தவரோ" என்று நினைக்கும் நிலையில் நின்று கலங்குவார்கள்.

இப்போது ஆங்கிலம் ஒன்றுமே நமது தமிழ்மொழி எவ்வளவு சீர்குலைந்திருக்கிறதென்பதைப் பாருங்கள். நாட்டுப்புறங்களில் இருப்பவர்கள்கூடத் தாய்மொழியில் முழுது ஆங்கிலச்சொற்களைக் கலந்து பெருத்த அபத்தம் பேசிவிடுகிறார்கள். எடுத்துக்காட்டாக "இன்று காப்பி (coffee) ஃபஸ்டாய் (first) இருந்தது." "உனக்குக் கொஞ்சங்கூட சென்ஸ் (sense) இல்லை" "ப்ளீஸ் (please) ஜானகி இந்தப் பென்சிலை (pencil) மெண்ட் (mend) பண்ணித்தா" என்று பேசுவது கண்கூடு. இந்த நிலைமையில் இந்தியும் பொதுமொழியாக மாறிவிட்டால், நம் தமிழ்மொழி என்னவாகும் என்பதைச் சற்றே உணர்ந்து பாருங்கள்.

"ஏ சோக்ரா! நீ பசாருக்குப்போயி ஒன் ருப்பிக்குச் சாவலும் ஆட் அணுவுக்கு டாலும் வாங்கிக்கினு இதர் ஆவ்."

என்றல்லவா பேசுவார்கள். இந்தச் சொற்றொடரில் எத்தனை தமிழ்ச் சொற்கள் இருக்கின்றனவென்று நீங்களே கணக்கிட்டுப் பாருங்கள். பிறமொழிக் கலப்பால் இக்காலத் தமிழ்நடை தன் இனிமையும் தூய்மையும் பழமையும் குன்றியிருப்பதை எவரே உணராதார்! மேல்நாட்டவர்கள் தமிழ்மொழியைப்போற்றுவதில் ஆயிரத்தில் ஒரு பங்கு தானும் நம் தமிழ் மக்கள் பலரிடத்துக் காணப்படவில்லையே! குமரிமுனைக்கும் இமயமலைக்கும் இடையேயுள்ள பூப்பரப்பின் பொதுமொழியாக ஒருகாலத்தில் இருந்த நம் பைந்தமிழ் திரும்பவும் அந்நிலையை அடையும் நாளும் உண்டாகுமா? அதற்காக நமது உடன்பிறப்பாளர்களான தமிழ் இளவீரர்கள் ஆர்வத்தோடு முயற்சி எடுத்துக் கொள்வார்களா? அல்லது பிறநாட்டவர்களின் வாலைப் பிடித்துத் தொங்குவதுதான் "எங்கள் பிறப்புரிமை" என்று வாளா இருப்பார்களா?

இமயம் நீரிடை மூழ்கிக்கிடந்த காலத்திலும், இந்து மகாசமுத்திரம் நிலப்பரப்பாய் இருந்த காலத்திலும் நம் தமிழ் மக்கள் வாழ்வு நடத்தினார்கள் என்று சொல்லப்படுகிறது. தமிழர்களுடையவும், தமிழ் மொழியினுடையவும் தொன்மை சரித்திர காலத்தையுங் கடந்து, அதற்கு அப்பாலும் அப்பாலும் ஊடுருவிச் சென்று நீண்டுபோகிறது. இப்போது தமிழனுக்குத் தாய்மொழிப் பற்று ஒரு சிறிதும் இல்லையென்பது உலகறிந்ததொன்று. தமிழனுக்குத் தாய்மொழியினிடத்துத் தணியா வேட்கை என்று எழுகிறதோ அன்றே அவன் வாழ்வு மணம் பெறும். முதலில் பலவழியிலும் சிதறுண்டு கிடக்கும் நம் தமிழ் இனத்தை ஒருமைப்படுத்துவதற்குக் கருவியாகவுள்ள தமிழைச் சரிவரக் கற்று, நாம் எல்லாரும் ஒரே இனத்தவர் என்று கண்ட பின்பு, வேண்டுமானால், விரும்புகிறவர்கள் கட்டாயமின்றி இந்தி மொழியையும் கற்றுக்கொள்ளலாம். தாய் மொழியில் புலமை நிரம்பப்பெற்ற பின்னே வேறு பல மொழிகளைப் பயிலலாம். தடுப்பவர் எவருமில்லை.

நாமும், நமது தமிழ் மொழியும் விடுதலையும் முன்னேற்றமும் அடையக்கூடிய முறையில் சுயநலங் கருதாது உழைப்பவர்களை ஆதரித்து முன்னணியில் நிற்கச் செய்வதே தமிழ் மக்களாகிய உங்கள் கடமை. அறிவுடை அன்பர்களே! எல்லாரும் ஒருங்கு சேர்ந்து மக்கள் கவலையொழிய—காலமாறுதலால் வளர்ச்சி குன்றி ஒளி மழுங்கியிருக்கும் தமிழ் மொழி பழைய உன்னத நிலையை அடைய முயற்சி செய்யுங்கள். ஒரு காலத்தில் உலகமெலாம் வழங்கி வாழ்ந்ததாகக் கருதப்படும் நமது தமிழ்மொழியை — இப்போது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் சிறைப்படுத்தியிருக்கும் இளமை குன்றாப் பழந் தமிழ்மொழியை, அவ்வெல்லைக்குள் இருக்கும் மக்களாவது சரிவரப் பேசவும் எழுதவும் தெரிந்து கொள்ளக் கூடியதாகும் கட்டாயத் தமிழ்க் கல்வி முறையை உண்டாக்கும் ஏற்பாடுகளைச் செய்வதிலேயே இன்னும் மிகுதியான ஊக்கமும் உழைப்பும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்கப்படும் பாடங்கள் சிலவற்றைத் தமிழிலேயே கற்றுக் கொடுக்கும்படி செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு ஓரளவுக்குத் தமிழ் மொழிக்கு ஆக்கந் தருவதாயினும், அந்த ஏற்பாடு தனித் தமிழ் வளர்ச்சிக்கு அடிகோலுவதாகாது. பல சொற்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படாமல் அப்படியே உச்சரிக்கப் படுகின்றன. பிறமொழிகளில் இருக்கும் எந்தச் சொல்லையும் தமிழாக்கி, அதாவது ஆங்கிலச் சொல்லையோ, சமஸ்கிருதச்சொல்லையோ அப்படியே தமிழில் உச்சரிக்காமல், அச்சொற்களை எல்லாம் தமிழில் ஆக்கிக் கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக ('cycle') என்ற ஆங்கிலச் சொல்லை 'ஈருருளி' என்றும், 'பிரத்யட்சம்' என்ற சமஸ்கிருதச் சொல்லைக் 'கண்கூடு' என்றும் தமிழில் சொல்லும் நிலைமையை மாணவர்களுக்கு உண்டாக்கவேண்டும். அப்போதுதான் சர்க்கார் தமிழ் மொழி வளர்ச்சியில் கருத்துக் கொண்டுள்ளனர் என்று கருதப்படுவர். இங்ஙனமன்றித், தமிழ்ப்போர்வைக்குள் ஆங்கிலமும், சமஸ்கிருதமும், இந்தியும் பிறவும் புகுந்து, தமிழ்மொழி வளர்ச்சிக்கு இடையூறு உண்டாகும் முறையில் பாடபுத்தகங்கள் அமையுமானால், அது, தமிழை வளர்ப்பதற்குப் பதிலாக அதனை அழிப்பதாகவே முடியும். எனவே, நாம் கூறும் இந்த யோசனையை 'பாரோ சிலர்' கூறுகின்றார்கள் என்று சர்க்காரும் வாளா இருந்துவிடாமல், ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இந்தியை விருப்ப பாடமாக வைத்திருக்கும் ஏற்பாட்டில் உள்ள சில சிக்கல்களையும் நீக்கி, விருப்ப பாட மேன்பதற்குரிய முறையை இன்னும் நன்றாகத் தெளிவுபடுத்தியும் திருத்தியும் அமைக்கவேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறோம்.

# ★ விஞ்ஞான வளர்ச்சி ★

—●—

இன்றைய உலகம், பொறி (இயந்திர) உலகம். துணி செய்வதற்குப் பொறி, மணியறிவதற்குப் பொறி, மண்ணிலே ஓடுவதற்குப் பொறி, விண்ணிலே பறப்பதற்குப் பொறி, சுருங்கச் சொல்லின் யாவும் பொறியினாலேயே நடைபெறுகின்றன.

கணிதவுள்ளார் பட்டியலங்காதது இன்னும் பொறித்துறையில் பெரிதும் வருந்தி முயன்று கொண்டிருக்கின்றனர். இன்னும் என்னென்ன பொறிகள் வருமோ அறியோம்.

இப்பொறிகளெல்லாம் பெரும்பாலும், ஏன் முழுதும், மேனாடுகளில், கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என நமக்குத் தெரிகின்றன. இது ஏன்?

ஆம், மேல் நாட்டவர் புறப்பொருள்களை நன்கு ஆய்ந்து அவற்றின் உண்மைத்தன்மைகளைக் கண்டு மக்கள் வாழ்க்கைக்கும் பயன்படத் தக்கவாறு பலப்பலவாய் இயற்றித் தமக்கும் நமக்கும் பெரு நலன் விளைவித்துள்ளனர். நாம்?

இராமன் வாலியைக் கொன்றது நியாயமா அல்லவா? தொல்காப்பியத்துக்கு முன்னிருந்து கடல் கொண்டுபோன பழந்தமிழ் ஏடுகளிலுள்ள பழந்தமிழ்க் கொள்கைகள், ஏனாதி நாயனாரின் அன்பு முதலியவற்றில் ஈடுபட்டிருக்கிறோம்.

இவைகள் வேண்டாமென்பது என் கருத்தன்று. எவ்வெவற்றிற்கு எவ்வெவ்வளவு நேரமும் முயற்சியும் செலவழிக்கவேண்டுமோ அவ்வவ்வளவு செலவழிக்க வேண்டுமென அறிஞர் கூறுவர். ஆகவே நிழலைப் பிடித்துக் கொண்டு பொருளைப் போகவிடக் கூடாதென்பதே எமது கருத்து.

ஆகவே, அறிவியல் நூல்கள் அளவிலவாய் வெளிவரவேண்டும். அதனைப் படித்து மக்களும் அத்துறையில் ஒல்லும் வகையில் முயன்று உலகுக்கு உதவவேண்டும்.

பழங்காலப் புது புனைவுகளைப் பற்றி சிறிது அறிய வேண்டும். கண்டு பிடித்தலுக்கும் புதுப்புனைவுக்கும் வேறுபாடுண்டு.

இயற்கைப் பொருள்களின் இயக்கத்தில் உள்ள தொடர்பையறிவதே கண்டு பிடித்தலாம். இதற்கு எடுத்துக்காட்டாக நியூட்டன் என்ற அறிஞர் இலந்தைப்பழம் விழுந்ததைக் கண்டு, இழுக்குமாற்றல் இந்நிலத்திற்குண்டென்று கண்டுபிடித்ததைக் கூறலாம். இவ்வறிவைப் பயன்படுத்திப், பயன்படத்தக்க பொறிகளியற்றுவதே புதுப் புனைவாம். ஜேம்ஸ் வாட்டு என்ற சிறுவன் நீராவியினாற்றலைக் கண்டான். அதைப் பயன்படுத்தி இரெயில்லென்னும் புகைவண்டி இயக்கியை ஆக்கினான். இதுவே புதுப் புனைவாம்.

நம்மிற்சிலர், இப்போது நம் பயன்பெறும் பல பொறிகளும் இப்போதுள்ள நிலையில் ஒரு காலத்து ஒருவரால் இயற்றப்பட்டிருக்கலாம் என்று எண்ணக்கூடும். அவ்வாறன்று ஒருவர் கண்டு பிடித்த இயற்கையுண்மையினை வைத்து ஒருவர் மிக வருந்தி ஒரு பொறியியற்ற முயலுவர். அது பல முறை முழுதும் அன்றி அவர் காலத்து முடிவு பெறாதிருந்து பின்னோர் காலத்து பிறிதொருவரால் முடிவடைவதுமுண்டு. அதிலும் எத்தனையோ குறைபாடுகள். பிறகு அவற்றை நீக்க முயற்சி. இவ்வாறு அரும்பாடுபட்டு ஆக்கப்பெற்றனவாகும்.

நிலத்தை ஆராய்ந்த அறிவுநூற் புலவர், இதன்கண் பல பகுதிகளிலும் வாழ்ந்துவரும் மக்கள் வரலாற்றை நான்காகப் பிரித்துள்ளனர். அவை, பழங் கற்காலம், புதுக்கற்காலம், வெண்கலக் காலம், இருப்புக் காலம் என்பன. இப்பிரிவு அறிவு வளர்ச்சியின் ஏற்றத் தாழ்விற்கேற்பதாகும். எடுத்துக் காட்டாக ஒரு காலத்தில் அமெரிக்காவில் செவ்விந்தியர்களின் நாகரீகம் புதுக்கற்காலம் என்று சொல்லத்தக்கதாயிருந்தது. அதற்குப்பின் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்தோர் நாகரீகம் பழைய கற்காலம் என்றே சொல்ல வேண்டியதாகும்.

உலோகங்களை யார், எவ்வாறு எப்போது கண்டுபிடித்தனர் என்று கூறுவதற்கில்லை. தகரம் மெல்லிய தகடு. செம்பும் ஒரு வகையால் அவ்வாறே. இரண்டுங் கலந்த கலப்போகமாய் வெண்கலமாக விளங்குகிறது. தனி உலோகமாகிய இரும்பு இருக்க, கலப்பு உலோகமாகிய வெண்கலம் எவ்வாறு பயன்பட்டது என்று அறிய வேண்டியதாகும். இரும்புக்கு மிகச் சூடு வேண்டும். இரண்டுந் தனித்தனி உலோகமாயினும் இரும்பை விட இவை எளிதில் உருகும். இக்காலத்தைப்போல் மிகச் சூடெழுப்பும் கருவிகள் அக்காலத்திலில்லை. இதனால்தான் வெண்கலத்தை ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே பயன்படுத்தினர்போலும். பழைய ரோமாபுரி, கிரீசு, எகிப்து முதலிய நாடுகளில் உள்ள கல்லறைகளைக் கவனித்ததால் இவ்வுண்மை கண்டறியப்பெற்றது. அவைகளில் வெண்கலத்தால் செய்யப்பெற்ற அரிவாள், வாள், கத்தி, சிரை (சவர)க் கத்தி, இரம்பம் இவற்றைக் காணலாம். இக்காலத்தில்தான் பண்டை மனிதர் பயிர்த்தொழில் செய்து பண்புடன் வாழவும் கொடிய விலங்குகளைக் கூற்றென ஒறுக்கவும் அறிந்திருக்க வேண்டும்.

எகிப்தியர்களே தொன்மையில் நாகரீகத்தில் நனி சிறந்திருந்தனர். கண்ணாடியைக் கண்டு முதன் முதல் அதனால் கலன் அமைத்தவர்களும் அவர்களே. 2300 ஆண்டுகட்கு முற்பட்டதும் இங்கிலாந்து கண்காட்சிச் சாலையில் இருப்பதுமாகிய துளைக் கருவி போன்ற உறுதியானது இக்காலத்திலுமில்லையாம். குழந்தைகள் குடிக்கும் இரப்பர் (Rubber) பாற்கருவி அக்காலத்தில் சுடு மண்ணால் இருந்தது.

அறுத்தூற்றியாற்றும் மருத்துவர்கள் (சர்ஜன்கள்) பல் மருத்துவர் முதலிய பல்வகை மருத்துவர்களும் இருந்தனர். இறந்தோர் வாயெலும்பில் தங்கப் பொய்ப் பற்கள் தங்கியிருந்தன. இறந்தோராயினும் அவர் தம் பல்லைப் பிடுங்குவது எகிப்தியர் இயல்புக்கு ஏற்றதல்லவாம்.

இன்னும் இவர்கள் சிலைகள் போன்ற பொருள்கள் காலமாறுபாட்டால் கேடுறாதிருக்கும் முறையைக் கையாண்டனர். பூதக் கண்ணாடி அவர்கள் அறியாததன்று. நீட்டல் நிறுத்தல் முதலிய அளவு நூன் முறைகளும் அரசருடல்களை பொன்னேபோல் போற்ற இயைபு நூன் முறைகளும் அறிந்திருந்தனர்.

இத்துணை அரிய நூல்கள் ஐந்நூறாயிரம் நிறைந்த ஓர் நூல் நிலையம், அந்தோ! மதவெறியால் சிதைந்தது.

இப்போது 'ஆர்ட்டீசியன்' கிணறு எனப்படும் நிலத்தைத் துளைத்து நீர் கொள் நிலை முதன் முதலில் பிரான்சு நாட்டில் ஆர்ட்டாயிசு என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. எத்தகைய கூர்மை பொருந்திய எஃகும் துளைக்க இயலாத ஒருவகைக் கம்பளியை கிரேக்கர் பயன்படுத்தினராம். மடிக்கவும் வளைக்கவும் சுருட்டவும் கூடிய கண்ணாடியைக் கண்டு பிடித்தார்களாம் உரோமர்கள். இந்த உரோம தேசத்தில் வான்தொடும் உயர் மாளிகைகளும் பளுவான பொருள்களை விரைவிலே உயர்த்தும் தூக்கிகளும் இருந்தனவாம். புதுப்புனைவாளர் புகுங்கதி முன்னமே சொல்லப்பட்டதன்றோ?

அலுமீனியம் கண்டுபிடித்தவன் அடைந்ததும் அதுதான். அத்தொழிலாளி, அலுமீனியக் கிண்ணமொன்றை அரசனுக்குக் கையுறையாகக் கொடுத்தான். பார்த்தான் அரசன். வாங்கினான் கையில், கீழே விழுந்தது. ஆயினும் என்ன? ஒரு சிறுமயில் அதன் நசுக்கத்தை நீக்கி நல்லதாக்கினான் அத்தொழிலாளி. வெள்ளியென விளங்குவதும் பளுவானதுமான அவ்வுலோகத்தால் அரசன் தன் மாளிகை, வெள்ளிக் கலன்கள் விலையிழக்கு மென்றஞ்சினான் அரசன். தொழிலாளி அரசனுடைய பரிசை நோக்கி நின்றான். தொழிலாளி தூக்கிலிடப்பட்டான். புதுப்புனைவு ஆக்கப் பாடுபட்டோர் அடைந்த பேறு இதுதான். விஞ்ஞான வளர்ச்சிக்கு அக்காலத்தில் எவ்வளவு இடையூறு இருந்ததென்பதற்கு இந்நிகழ்ச்சி ஓர் எடுத்துக் காட்டு.

---

# அமெரிக்க-இந்திய பெட்ரோல்

விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவாக திராவக பதார்த்தங்களை, கெட்டியான பதார்த்தங்களாக மாற்றுவதற்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. திராவக பதார்த்தங்களைப் பல்வேறு நாடுகளுக்கு அனுப்புவது சம்பந்தமாக பிரிட்டனில் ஓர் புதிய முறை கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது யுத்தக்காலங்களில் சிக்கனத்தைக் கருதி, பெட்ரோலுக்குப் பதிலாக வேறு ஏதேனும் எண்ணெய் வகைகளை உபயோகப்படுத்துவது சாத்தியமாவென்பதைக் கண்டுபிடிக்கும் பொருட்டு, சமீபத்தில் ஆராய்ச்சி நடைபெற்றது. 'பெட்ரோலை' கெட்டியான பதார்த்தமாக மாற்றி தேவையான இடங்களுக்கு அனுப்பி வைப்பது மிக சுலபமெனவும் கண்டுபிடிக்கப்பட்டது.

இம்மாதிரி தயாரிக்கப்பட்டுள்ள புதிய 'பெட்ரோல்' நிலக்கரியிலிருந்து எடுக்கப்படுகிறது. இம்முயற்சியில் போதிய வெற்றி கிடைத்தால், இந்தப் புதிய பெட்ரோலுக்கு மார்க்கெட்டுகள் அதிகமாகக் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை.

பெட்ரோலுக்குப் பதிலாக வேறு எண்ணெயைக்கண்டுபிடிப்பதற்கான முயற்சி அமெரிக்காவிலும் நடைபெற்றது. அமெரிக்க விஞ்ஞானிகள் தங்களது ஆராய்ச்சியில் வெற்றியடைந்தபோதிலும் அவர்கள் கண்டுபிடித்துள்ள 'பெட்ரோலை'த் தயாரிப்பதற்கு அதிகமான பொருள் செலவாகிறது.

பிரிட்டனில் உற்பத்தி செய்யப்படும் நிலக்கரி எண்ணெயின் விஷயம் வேறு. எண்ணெய் எடுக்கப்படும் நிலக்கரி மிகவும் மட்டரகமானதால் அதன் விலையும் குறைவாக இருக்கிறது. நிலக்கரி எந்த ரகத்தைச் சேர்ந்ததாக இருந்தபோதிலும் பரவாயில்லை. அதிலிருந்து பெட்ரோல் எடுக்கலாம். சாதாரணமான பெட்ரோலைவிட, இப்புதிய பெட்ரோலை உபயோகிப்பதால் செலவு அரைப் பங்கு குறைகிறது. விமான எதிர்ப்பைத் தடுப்பதற்கு, இது முக்கிய சாதனமாக அமைந்திருக்கிறது. பிரிட்டனில் நிலக்கரி ஏராளமாக அகப்படும் இடங்களிலெல்லாம் இந்தப் 'பெட்ரோலை' உற்பத்தி செய்வதற்காக சர்க்காரும் தங்களாலான ஆதரவளித்து வருகின்றனர். ஐரோப்பா தவிர மற்றுமுள்ள சாம்ராஜ்ய நாடுகளில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரி அவ்வளவு உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல. மற்றும் கடந்த மகாயுத்தத்தின் அனுபவத்திலிருந்து சமுத்திரத்தைத் துளைத்துச் செல்லும் பிரம்மாண்டமான போர்க்கப்பல்கள் எவ்வளவு தான் வலிமை பெற்றிருந்தபோதிலும் பெட்ரோல் இல்லையென்றால் இருந்த இடத்திலிருந்து ஒரு அடி கூட நகரமாட்டாது என்பது வெளிப்படையாய் இருக்கிறது.

இதுபற்றியே தான் யுத்தகாலத்தில் தங்கச் சுரங்கங்களைப் பார்க்கிலும் உலகிலுள்ள எண்ணெய் ஊற்றுகள் மிகவும் முக்கியமாக மதிக்கப்படுகின்றன. விமானப் படையினர் தங்கள் வேலைகளைத் திறம்படச் செய்வதற்கும், விமானங்களை வெகு தூரம் செலுத்துவதற்கும் 'பெட்ரோல்' இன்றியமையாதது. ஆகவே, எவ்வளவுக் கெவ்வளவு 'பெட்ரோல்' சௌகரியங்கள் ஒரு நாட்டுக்கிருக்கிறதோ, அதற்குத் தக்கவாறு அந்நாட்டின் விமானப்படைகள் தீவிரமாக கடமையாற்ற முடியும்.

இப்போது இங்கும் இந்த முயற்சி தொடங்கப்படுகிறது. நிலக்கரியின் வாயிலாகப் பெட்ரோலை உண்டாக்கும் முறையை இங்குள்ளவர்கள் செய்ய முற்பட்டிருக்கின்றனர். இதற்கான அடிப்படை வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிகிறது. இதனைச் செய்வதற்கு அமெரிக்காவிலிருந்து நிபுணர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனராம். இங்குள்ள சிலர் அமெரிக்கா சென்று இத்தொழிலைக் கற்றுக்கொண்டுவந்து செய்தால்; இந்நாட்டுக்கு இன்னும் மதிப்பு அதிகக்கப்படும். எடுத்ததற்கெல்லாம் வெளிநாட்டவரை எதிர்பார்த்து நிற்கும் கேவலம் என்று மறையுமோ?

---

மதிப்புரை

**"திருவிடம்"**

காஞ்சிபுரம் தோழர் C. B. தண்டாயுதபாணி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "திருவிடம்" என்ற மாதம் இருமுறை வெளியீடு, திராவிட மக்களின் முன்னேற்றம் கருதிப் பணிபுரிய வேண்டுமென்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தோழர் தண்டாயுதபாணி அவர்களின் இம் முயற்சி வெற்றிபெறக்கூடிய முறையில் தோழர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இவ்வெளியீட்டுக்குக் கிடைக்கவேண்டும் என்பது எமது விருப்பம். "திருவிடம்" தனிப் பிரதி 0—1—6; ஆண்டுச் சந்தா ரூபா 2—0—0 விபரங்களுக்கும், ஏஜன்சி நிபந்தனைகளுக்கும் கீழ்கண்ட முகவரிக்கு எழுதவும்.

மானேஜர்,
"திருவிடம்" காரியாலயம்,
20-B, மதங்கீஸ்வரர் கோயில் தெரு,
காஞ்சிபுரம்.

# திராவிட நாடு

காஞ்சி] 27—6—48 [ஞாயிறு


# ஏதேச்சாதிகாரம்

✻

“நம்முடைய உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டு விட்டன. நமக்கு எழுத்துச் சுதந்திரமில்லை—பேச்சுச் சுதந்திரமில்லை—காரணம், நம்மை அந்நியன் ஆளுகின்றான். அவனை விரட்டியடித்தாலன்றி நாம் மக்களாக வாழ முடியாது,” என்று பேசி—அதற்காகப் பல தியாகங்களைச் செய்து, அந்நிய ஆட்சி முறையை அகற்றி, மக்களாட்சியை நிறுவி விட்டதாகச் சொல்லிக்கொள்ளும் நம்முடைய சர்க்கார், இன்று நடந்து கொள்ளும் முறையைப் பார்த்தால், அவர்களுக்கு இவர்கள் எந்த வகையில் மேலானவர்கள் என்று கேட்கக் கூடிய முறையிலேயே இவர்களுடைய அரசியல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

சென்ற வாரம், சென்னை சர்க்கார், திராவிட மக்களின் முன்னேற்றத்திற்காகப் பணி புரியும் “விடுதலை” தினசரிக்கு ரூபா இரண்டாயிரம் ஜாமீன் கட்ட வேண்டுமென்று கட்டளை பிறப்பித்திருக்கிறது.

ஒரு இனம், தங்கள் குறைபாடுகளையும், தாங்கள் படும் வேதனைகளையும் கூறி, அவை ஏற்பட்ட விதத்தையும், அவை ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதையும் விளக்கி, அக்குறைபாடுகள் ஒழிய வேண்டும்—நீக்கப்பட வேண்டும் என்ற உணர்வு பெற்று, அதன் பொருட்டு உழைத்து வரும் முறையைத் தவறென்றும்—சட்ட விரோதமென்றும் கருதி, அடக்குமுறைகளை அள்ளி வீசுவது ஜனநாயக ஆட்சி முறைக்கு முற்றிலும் புறம்பானது.

மக்கள் சர்க்கார் — மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார்—மக்களுக்காக உடல், பொருள், உயிர் அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராயுள்ள சர்க்கார்—மக்களின் மனப் பண்புகளை நன்கறிந்த சர்க்கார், ஒரு இன மக்களின் சமுதாய முன்னேற்றமன்றிப், பிறிதொன்றையும் குறிக்கோளாகக் கொள்ளாது பணிபுரிந்து வரும் ‘விடுதலை’க்கு ஜாமீன் கேட்பதை விவேகமுடைய செயலென்றோ, விரும்பத்தக்க முறையென்றோ எவரும் கூறமாட்டார்கள்.

“திராவிடனே! உன் சமுதாயம், சேறும் பாசியும் நிறைந்த குட்டை போல் ஆகிவிட்டது. சேறும் பாசியும் நிரம்பிய குட்டையிலுள்ள நீரை எவரே விரும்புவர்! அந்த நீர் குடிப்பதற்கோ, குளிப்பதற்கோ முடியாதபடி ஆக்கப்பட்டு விட்டது. எனவே, அதை உபயோகித்து உன் உடலை நோய்க்காளாகும்படி செய்துவதைந் தடுபோகாதே! சேற்றை அகற்றி, பாசியை நீக்கித் துப்புரவு செய்து உபயோகப்படுத்திக்கொள்” என்று ‘விடுதலை’ கூறுகின்றது.

‘இப்படிக் கூறுவது தவறு—எனவே இரண்டாயிரம் ரூபா ஜாமீன் கட்டு’ என்று சர்க்கார்—மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சர்க்கார் கூறுகின்றது. இது நியாயமா?

“ஒரு காலத்தில் நீ உன்னத நிலையில் இருந்தாய். இந்நாட்டு ஆட்சி உன்னுடையதாய் இருந்தது. ஆனால், இன்று! நீ ஆண்டியாகக் கிடக்கிறாய்—வீரனாய் — விறல்வேந்தனாய் இருந்த நீ, கோழையாய்—பூனையைக் கண்டஞ்சும் பேதையாகிக் கிடக்கிறாய் சிம்மாதனத்தில் சிறப்போடிருந்த நீ, இன்று செங்கை ஏந்திச், சேவடி காத்து நிற்கிறாயே! இப்படி நீ ஆனதன் அடிப்படையை உணரவில்லையே!” என்று கூறி விளக்கமும்—விழிப்பும் உண்டாக்கி வருகின்றது ‘விடுதலை.’

‘இவ்வாறு செய்வது மாபெரும் குற்றம்’ என்று, மக்கள் சார்பில் அரசியலை நடத்தும் சர்க்கார் கூறுகின்றது; ஜாமீன் கேட்கின்றது. இது நேர்மையா?

“கீழ்த்தர ஜாதியாய்—நான்காம் ஐந்தாம் ஜாதியாய் ஆக்கப்பட்டு விட்டாய்—உழைத்தாலும் உழைப்பின் பயனை அடைய முடியாதபடி செய்யப்பட்டு விட்டாய்—பொருளாதாரத்தில் நசுக்கப்பட்டு விட்டாய்—கல்வியில் 100-க்கு 90 பேர் தற்குறிகளாய் இருக்கும் கொடுமையைப் பெற்றுவிட்டாய் — அரசியலிலோ பிற துறைகளிலோ கேவலம் கீழ்த்தரசிப்பந்திபாய்ச் சீர்குலைக்கப்பட்டு விட்டாய்” என்று கூறித் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு அறிவுத்துறையில் புத்துணர்ச்சியையும், வாழ்க்கைத் துறையில் வளர்ச்சியும் பெறும்படி ‘விடுதலை’ பணியாற்றி வருகின்றது.

சாதிச் சனியனையும், மதப் பூசல்களையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும், கல்வியின்மையையும் நாட்டிலிருந்து விரட்டியடிப்பதையே நாட்டமாகக் கொண்டுள்ளதாகச் சொல்லப்படும் சர்க்கார், இத்துறைகளில் சர்க்காரின் கொள்கைகளுக்குச் சாதகமான முறையில் பணியாற்றி வருவதைத் தவறான காரியம் என்று எண்ணி, “எடு இரண்டாயிரம் ரூபா ஜாமீன்” என்று கேட்கிறது. இது முறையா?

மருமகள், தன்னை மாமியார் படுத்திய கொடுமைகளை எல்லாம் கூறிக் கவலையில் ஆழ்ந்திருந்தாள். பின்னர், மருமகளே மாமியாராகும் நிலையைப் பெற்றாள். அவள், ‘என் மாமிக்கு நான் என்ன மாற்றுக் குறைந்தவளா’ என்று கூறித் தனக்கு மருமகளாய் வந்தவளை வாயார ‘வாழ்த்தி’ வகையான முறங்கொண்டு சாடினாள் என்பது போல், அந்நிய ஏகாதிபத்தியத்தால் அடைந்த கொடுமைகளையெல்லாம் கூறி, மக்களின் ஆதரவோடு அறப்போர் நடத்தி, அன்னியனை விரட்டி ‘அரசாட்சி’ நடத்துவதாகச் சொல்லிக் கொள்பவர்களே, அவன் ஆறடி பாய்ந்தால் நாங்கள் அறுபதடி பாய்வோம் என்று கூறி, மருமகளாய் இருந்தவள் மாமியாரான பின்னர் நடந்ததைப் போல் நடக்கத் தொடங்கினால், அதனை விந்தையென்பதா? வேடிக்கை என்பதா? விபரீதப் போக்கென்பதா?

இதுவா மக்களிடம் நன்மதிப்பைப் பெறும் வழி? ஆட்சிமுறை இந்தப் போக்கில் சென்றால் ஆட்டங்கண்டு விடுமே! பெற்ற சுதந்தரம் பறிபோய் விடுமே! அணைக்குமென்று எதிர்பார்த்த கரம், அடிக்கவந்தால் ஆத்திரத்தின் அளவு, எல்லையை மீறிவிடுமே!

இல்லாத கருப்புச்சட்டைப் படையை இருப்பதாக எண்ணித் தடை விதித்தது—இலக்கிய நூலான இராவண காவியத்துக்குத் தடை போட்டு விட்டது — இப்போது திராவிட மக்களின் நலனுக்காகப் பாடுபடும் ‘விடுதலை’க்கும் இரண்டாயிரம் ரூபா ஜாமீன் கேட்டுவிட்டது. இனி என்ன நடக்குமோ என்று திராவிடர்கள் எண்ணி எதி

பார்க்கும் நிலைமையையே சர்க்கார் உண்டாக்கியிருக்கிறது.

இத்தகைய விரும்பத்தகாத முறைகளைக் கையாளுவதன் வாயிலாகத் திராவிடர் கழகத்தையும் அதன் கொள்கைகளையும் ஒழித்து விடலாம் என்று சர்க்கார் கருதுமானால், அது உண்மையாகவே அவர்களுக்கு ஏமாற்றத்தையே தரும் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

திராவிடர்கழகம் ஒரு அரசியல் கட்சியல்ல; திராவிடமக்கள் தங்கள் நிலையை உணரவேண்டும் என்பதற்காகப் பணியாற்றிவரும் ஒரு பிரச்சார இயக்கமே என்று தலைவர் பெரியார் அவர்கள் அண்மையில் நடைபெற்ற மாகாண மாநாட்டிலே வெளிப்படையாகக் கூறிய பின்னரும், தனது இனத்தைத் தட்டி எழுப்ப—தன் இனத்தின் இழிவைப் போக்க—தன் இனத்தார் அகப்பட்டுள்ள வஞ்சகவலையைக் கிழித்தெறியப் பாடுபடும் ஓரே தினசரித்தாளாகிய 'விடுதலை'க்கு ஜாமீன் கேட்பது, அந்த இன மக்களையே சவாலுக்கு அழைப்பது போலாகும்.

எனவே, திராவிடர்கழகத்தை ஒழித்து, "விடுதலை"ப் பத்திரிகையின் வாயிலாகச் செய்யப்பட்டு வரும் திராவிடமுன்னேற்றப் பிரசாரத்தைத் தடுத்து, மத—சமுதாய அரசியல் துறைகளில் இருந்துவரும் குறைபாடுகளையும், கொடுமைகளையும், இழிவுகளையும், வஞ்சகங்களையும் எவ்விதத்திலும் — எந்தக்காரணத்தைக் கொண்டும் எடுத்துச் சொல்லப்படாது—திராவிடர்கள் இன்றுள்ள கீழ்நிலையிலிருந்து சிறிதளவும் முன்னேற்றமடையக் கூடாது —இது எங்கள் நோக்கம் என்ற முறையில் சர்க்கார் அடக்குமுறைகளை அள்ளிவீசுவது, ஆளுந்திறமையிலுள்ள கோளாறைக் காட்டுவதாகுமே தவிர, நேர்மைக்கும் ஒழுங்குக்கும் இந்தப்போக்கு எந்த விதத்திலும் துணைசெய்யும் என்றுகூற முடியாது.

திராவிடர் கழகம், அரசியலில் போட்டியோ, பதவியில் போட்டியோ போடுவதில்லை — சமுதாய சீர்திருத்தம் ஒன்றே தனது குறிக்கோள் என்ற முறையில் பணியாற்றி வந்தபோதிலும், சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில், பெயரளவுக்காவது சர்க்காரின் எதிர்க்கட்சி என்ற நிலையைப் பெற்றிருக்கிறது, எந்த நாட்டிலும் ஒரு சர்க்கார் இருந்தால் அதற்கு ஒரு எதிர்க்கட்சியும் இருந்தே தீரும். சர்க்கார் தனக்கு எதிர்க் கட்சி இல்லாவிட்டால்கூட, அதனை உண்டாக்கிக் கொள்ளும் வழக்கம் வேறுநாடுகளில் உண்டு. ஆனால் இங்கு நடப்பதென்ன? பெயரளவில் ஒரு எதிர்க்கட்சி, சர்க்காருக்கு யாதொரு தொல்லையும் கொடுக்காமல் இருந்தால்கூட, அதனையும் ஒழித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பதென்ற முறையில் காரியங்கள் நடைபெறுகின்றன — எதிர்க்கட்சியே கூடாது — எதேச்சாதிகாரமே எங்கள் குறிக்கோள் என்ற நோக்கில் சர்க்கார் நடந்துகொள்கிறது. இதற்குப் பேர்தான் ஜனநாயகமா?

எனவே, திராவிட மக்களுக்கு ஏற்பட்ட கேடுகளையும், முன்னேற்றத் தடைகளையும் பாமரமக்களுக்குத் தெரிவித்து, அவர்களின் குறைபாடுகளை நீக்கிக்கொள்ளும் முறையில் தொண்டாற்றிவரும் 'விடுதலை'க்கு ஜாமீன் கேட்பதன் வாயிலாகச் சர்க்கார் முறைதவறி நடந்துகொள்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதனைச் சர்க்கார் தவறென்று கருதுமானால், ஒரு இனமக்களின் குறைகள் நீங்காமலும் —நீக்கப்படாமலும் இருப்பதுமட்டும் நீதியா என்று கேட்கிறோம்.

அதிகாரம் ஒரு போதை! பருகப் பருக இனிக்கும். பழகப் பழக அதிலே சொக்கிவிழாதவர்கள் வெகு சிலரே. அதிலும் அரசியல் அதிகாரம், அதிகமான போதை தரும். அதைப் பருகுவோர், பரமானந்தமடைந்து, பாதம், பூமியிற் சரியாகவும் படியாதபடி தாண்டவமாடுவர்! அதைத்தான் அறிஞர்கள், அரசியற் கோமாளிக்கூத்தென்பர்! அந்தப் போதையின் பயனாக எதேச்சாதிகாரமும், சர்வாதிகாரமும் ஏற்படும். தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டனாக மாட்டானா? அதைப்போலவே தனக்கொரு எதிரியும் இல்லை என்ற மனப்பான்மையையும் கொண்டுவிட்டால், கேட்கவா வேண்டும் அவர் தம் திருவிளையாடலை! "யாராயினும் சரி" எனக்கூறி, எதற்கெடுத்தாலும் கச்சைக்கட்டி நிற்பர். இதுவே அதிகாரவெறி எனப்படுவது. இந்த நிலை தான், இன்று நமது மாகாணத்திலும் உள்ளது. இதுதான் மஞ்சள் பெட்டிதந்த அமங்களம். இன்றைய ஆட்சியிலே இது தொக்கிநிற்கிறது.

நிலைமையை மறைக்க, மூடிவைக்க, எவ்வளவு அழகான தேசியத்திரைபோட்டாலும் இந்தமாகாணத்திலே, ஜனநாயக ஆட்சி நடத்தப்படவில்லை என்பதை மறைக்க முடியாது. அதனைக் கண்டிப்போரும் அதிகமாகி விட்டனர். மெஜாரட்டி பலம் இருப்பதாலும், எதிர்க்கட்சி உருவின்றி இருப்பதாலும், அதிகாரத்திற்குப் பங்கமேற்படாது என எண்ணி இறுமாந்து, மஞ்சலில் உல்லாசமாகப் படுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் சரித்திரம் என்ன சொல்கிறது? அதிகாரவெறியின் உச்ச நிலை சென்ற ஜார் கதை, இன்று உலகில் ஒரு அரசியல் பாடமாக இருக்கிறது. அதிகார உச்சியிலேறி 'உறுமிப்' முஸோலினி, ஹிட்லர், உலக அரசியல் அறிஞர்களால் 'மூர்க்கர், பித்தர், பேயாட்டமாடுவோர்' என்று இகழப்பட்டார்கள். பொது ஜனங்கள் சரித்திரம்போதிக்கும் பாடத்தைக் கூடவா மறந்துவிடுவார்கள்?

"பொது ஜனம் எங்களை ஆதரிக்கிறது. அவர்கள் தந்த ஓட்டுகளே எமக்கு இப்பதவியைத் தந்தன" என அதிகாரவர்க்கம் கூறுகிறது. ஆனால் இதன் உண்மை என்ன? பொது ஜனம், இவர்களை ஆதரித்தது எதற்கு? இந்தச் சர்வாதிகார ஆட்சிக்கா? இவர்களை ஆதரிக்காத பொது ஜனங்களே இல்லையா?

'பல்லக்குச் சவாரி' அதிக நாளைக்கு நடக்காது. சுமந்து வருபவரின் தோள்வலியே அதிகரித்து விட்டது. இன்றைய ஆட்சி முறை இதைவிளக்கிவிட்டது. "தினைவிதைத்தவன் தினையே அறுப்பான். வினை விதைத்தவன் வினையே அறுப்பான்" என்று ஒரு சாராரும், "வளை வெட்டப்பூதம்புறப்பட்டதே" என்று மற்றொரு சாராரும், எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இருசாராரும் ஒன்று சேரும்சமயம், நெருங்கி விட்டது என்பதைக் கூற விரும்புகிறோம். அச்சமயம் வந்தால் அதிகார மயக்கம் தானாகத் தெளியும் என்பதைச் சர்க்காருக்கு நினைவூட்டி, இந்த எதேச்சாதிகாரப் போக்கை மாற்றிக்கொள்க என்று எச்சரிக்கிறோம்.

# தமிழ்நாட்டில் இந்திமொழி

## கட்டாய பாடமானால்

இக்கட்டுரை, இந்தி கற்க விரும்பும் தமிழ் மாணவர்கட்கு ஒரு எச்சரிக்கை போன்றதும், 1948-ல் இந்தி கற்கத் தொடங்கும் ஒரு மாணவன் 1952-ல் அதனை எப்படிப் பேசுவான் என்பதை விளக்குவதுமாகும். இதனை இந்தி கற்க விரும்பும் மாணவர்கள் நன்கு சிந்திக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

தங்கவேல் என்னும் பெயருடைய மாணவன் ஒருநாள் காலையில் எழுந்து குளித்து உணவருந்திய பின், ஒவ்வொன்றாகத் தன் பாடங்களைப் படிக்கிறான். இந்திப்பாடம் படிக்கத் தொடங்கும்பொழுது, அடுத்த தெருவிலே ஒருநாள் தான் கேட்ட பாட்டு ஒன்று அவனுடைய நினைவிற்கு வருகிறது. பாடுகிறான்:-

க்யா கர்னா வாலா
என்ன செய்யப் போறேன்.
க்யா கர்னா வாலா—

யானைப்பேர் ஹாத்தி—குதிரைப் பேர் கோடா—தல்வார்ப் பேர் வாள்—இந்த பூனைப்பேர் பில்லி,—'க்யா கர்னா வாலா"

பாடியபின் நினைவிலாழ்ந்து, "இது என்னடா சங்கடம்? யானைக்கு ஹாத்தி, குதிரைக்குக் கோடா, வாளுக்குத் தல்வார், பூனைக்குப் பில்லி, இதை எல்லாம் திருப்பித் திருப்பிப் படித்தாலும் ஞாபகம் இருக்கிறதில்லை. ஞாபகத்துக்கு என்ன இந்தி? (தலையைச் சொறிகிறான்) நேற்றுத்தான் பார்த்தேன், இன்று மறந்துவிட்டேன். (இந்தி புத்தகத்தைப் பார்க்கிறான்) இதோ இருக்கிறது. ஞாபகத்திற்கு இந்தியில் 'யாத்', 'யாத்ரக் என்றால் 'ஞாபகம் வை' இந்த இழவை எல்லாம் எப்படி 'யாத் ரக்' கிறது"

'யாத் ரக்' என்று தங்கவேல் சொல்லிக்கொள்ளும்பொழுது அவனுடைய தோழனான கார்த்திகேயன், "யாத் ரக், புல்மத், தங்கவேல்" என்றான்.

தங்கவேல்:— "ஓ கார்த்திகேயா, ஆவ் பைட்டோ (வா, உட்கார்)" புல்மத் என்றால் என்ன? நீ சொல்ல வேண்டாம். நானே கண்டு பிடிக்கிறேன். தெரியுர், இப்பொழுது யாத் வருகிறது. 'புல்மத்' என்றால், மறந்துவிடாதே. ஆமா, 'யாத் ரக் புல்மத் அச்சா';—நல்லது.

கார்த்திகேயன்:— "பஹுத் அச்சா—ரொம்ப நல்லது—வெரிகுட் (Very good)"

தங்கவேல்:—"இங்கிலீஷ் மேம் பாத் மத் கர் (இங்கிலீஷில்பேசாதே) நேற்று ஒரு சங்கதி நடந்தது—சுனோ—கேள். நீ வரவில்லையே கல் (நேற்று). இந்தியில் 'பாட்சாலா' என்று வாசிக்க வேண்டியதைத் தமிழ் ஞாபகத்தால் 'பாடசாலை' என்று படித்துவிட்டேன். அந்த அத்யாபக்கு (உபாத்தியாயருக்கு) anger no—கோபம் வந்தது. இந்த இங்கலீஷ் ஒரு இழவு—தமிழிலே பேசப்போனால் இந்தி—இந்தியிலே சொல்லப்போனால் இங்கிலீஷ், பெரிய சனியனாய்ப் போய்விட்டது.

கார்த்திகேயன்:- '(ட்)டீக் பாத் ஹை (சரியான பேச்சு) கல் க்யா? (நேற்று என்ன?)"

தங்கவேல்:-'பாடசாலை' என்று படித்ததும் அத்யாபக் என்னைச் சீறிப்பார்த்து, 'க்யா தமில் பட்தா' (என்ன தமிழ் படிக்கிறாய்?) என்று கேட்டார். நான் அவரைப்பார்த்து, '(தமில் என்று சொல்கிறீர்களே, அது தவறு இவ்வளவுகாலமாக எங்களோடு பழகியும் தமிழ் என்று தங்களுக்குச் சொல்ல முடியவில்லையே)' என்றேன். அவருக்குக் கோபம் இன்னும் அதிகமாகி, 'சுவர், பைட்' (பன்றியே உட்கார்) என்றார். 'நானா சுவர்' என்று கேட்டேன். 'நீனா சுவர்' என்றார். பிள்ளைகள் சிறிது சிரித்துவிட்டார்கள். எல்லாம் 'குட்டிச் சுவர்' என்று நான் சொல்லிவிட்டு உட்கார்ந்தேன். அவருக்கு அப்பொழுது வந்த 'கிரோத்' கோபம்) சொல்லமுடியாது. என்னை அடிக்க வந்துவிட்டார். நான் ஓடிப்போய்த் தலைமை உபாத்தியாயருக்குச் சொல்லிவிட்டேன். 'ஆஜ்' (இன்று) அதுவிசாரணை. பள்ளிக்கூடத்திற்கு முன்னதாகவே போகவேண்டும். 'ஆவ்' (ச்) சலேங்கே (வா, போகலாம்)"

கார்த்திகேயன்:- "அரே, அரே, க்யா, தமாஷா!"

தங்கவேலும் கார்த்திகேயனும் பள்ளிக்கூடத்திற்குப் போகிறார்கள். தங்கவேல் பாடுகிறான்:—

வீட்டுப் பேர் கர்
திருடன் பேர் சோர்
முட்டைப் பேர் அண்டா
இது என்னடா தண்டா.
—க்யா கர்னா வாலா"

* * *

தமிழ் மாணவர்களே!

பார்த்தீர்களா, நந்தமிழன்னையின் அலங்கோலத்தை! பிறமொழிகள் எதனுடையவும் உதவி தினையளவு தானும் வேண்டாது தனித்து நின்று இயங்கும் வாய்ப்புப் பெற்றிருந்தும், நந்தனிச் செந்தமிழ் மொழி இத்தகைய இரங்கத்தக்க நிலையையா அடைதல் வேண்டும்? "தோன்மையிற் பழைமையானதும், திருத்தியமைக்க வேண்டுமென்பதில்லாததும், பிறமொழிகளின் உதவியின்றித் தனித்தியங்கும் வாய்ப்புப் பெற்றதுமாகிய மொழி தமிழ்மொழியே" என்று மேனாட்டுப் பேரறிஞரான டாக்டர்கால்டுவெல் (Dr Caldwell) அவர்களும் நடுநின்று ஆராய்ந்து கூறியிருக்கின்றார்களே! பொது மொழி ஒன்று புதிதாக வேண்டுமென்பதில்லாத நந்தமிழ்நாட்டுக்குப் பொதுமொழி ஒன்று வேண்டும்—வேண்டும் என்று கூக்குரலிட்டு, அதன்பொருட்டு, வட இந்தியாவிலும் ஒரு சிறு தொகையினரால் மட்டும் பேசப்பட்டு வருவதும், பலமொழிக்கலப்பால் ஆக்கப் பெற்றதும், இலக்கண அமைப்பும் இலக்கியச்சிறப்புமற்றதுமான ஒருவழ்மைச் சிதைவு மொழியாகிய "இந்தியை" இந்தியா முழுவதுக்குமே பொதுமொழியாக்க வேண்டுமென்று "கிணற்றின் ஆழமும் கயிற்றின் நீளமும் தெரியாமல்" நின்று புது முறையில் அரசியலை நடாத்தும் நமது தலைவர்கள் செய்துவரும் சூழ்ச்சிகளை ஒரு சிறிதும் உணராதும், இந்தி கற்பது நந்தமிழுக்கும் தமிழர் நாகரிகத்திற்கும் ஊறு விளைக்குமென்பதை உள்ளவாறு உணர்ந்து கூறும் அறிஞர் தம் அறிவுரைகட்குச் செவி சாயாதும், விளக்கை அணுகி அழியும் விட்டிற் பூச்சிகள் போல், ஐயகோ! நந்தமிழ் மாணவர் ஏமாந்து போகின்றனரே! இனியேனும் நந்தமிழ்மக்கள் தம் மொழிக்கும், தம் தன்மதிப்பு வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் பேரிடர்விளைவித்து

ஒரு குறிப்பிட்ட இனத்தாரின் முன்னேற்றத்திற்குமட்டுமே வழிகோலிக் கொண்டுவரும் ஒருசிலரின் சூழ்ச்சியை உணர்ந்து, தம் அன்னைமொழியாம் அருமைத் தமிழ்மொழிக்கு ஆக்கந்தேடித், தமிழ் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களில இந்தி எனனும் கொடிய புலி கட்டாய முறையில் நுழையாவண்ணம் தடை செய்வார்களாக! நந்தமிழ் மாணவர்கட்கு வீரமும்— ஆர்வமும் — ஊக்கமும் உண்டாவதாக!

✻

# அண்டம் வளர்கிறது

—●—

தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் வானசாஸ்திரம் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கின்றது. கலிலியோ தான் கண்டுபிடித்த தூரதிருஷ்டிக் கருவியால் வானத்திற் பல புதுமைகளைக் கண்டார். வியாழனுடைய உபக்கிரகங்கள் (Satellites) 8-ல் நான்கையும், சந்திர பிம்பத்தில் மலைகளையும், பால்வெளி (Milky Way)யில் பல நட்சத்திரக் கூட்டங்களையும், சனியைச் சுற்றியிருக்கும் வட்டங்களையும் (Rings) சுக்கிரனுக்குக் கலைகள் (Phases) இருப்பதையும், சூரியபிம்பத்தில் கரும் புள்ளிகள் (Sunspots) இருப்பதையும் கண்டுபிடித்தார். சூரியன் தன்னைத் தானே சுற்றுகிறது என்றும், கிரகங்கள் தங்கள் உபக்கிரகங்களுடன் சூரியனைச் சுற்றுகின்றனவென்றும் ஊகித்தறிந்தார்.

கலிலியோ காலத்திற்குப் பின் வந்த நியூட்டன், வில்லியம் ஹெர்ஷல் முதலியோரால் தூரதிருஷ்டிக் கருவி மிகவுந் திருத்தமடைந்தது. ஹெர்ஷல் 1781-ம் வருஷம், தான் உண்டாக்கின தூரதிருஷ்டிக் கருவியால, யூரானஸ் என்ற கிரகத்தைக் கண்டு பிடித்தார். 1846-ம் வருஷம் நெப்டியூன் என்ற கிரகம் லெவரியர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கிரகங்கள் தவிர, கண்ணுக்குத் தெரியாத எத்தனையோ நட்சத்திரங்கள் தூரதிருஷ்டிக் கருவியால் கண்டுபிடிக்கப்பட்டன.

நாம் வசிக்கும் பூமி, சூரிய மண்டலத்தில் (Solar System) சஞ்சரிக்கின்ற கிரகங்களிலொன்று. இம்மண்டலத்திற்கு நடுநாயகமாகவிளங்குவது சூரியன். சூரியன் ஒரு சுயம் பிரகாச நட்சத்திரம். அதாவது பிறிதொன்றின் ஒளியின்றித் தானே தன்னொளியால் பிரகாசிப்பது. இதைப் பூமியுள்பட எட்டுக் கிரகங்களும், பல்வேறு சிறிய கிரகங்களும், வால் வெள்ளிகளும் சுற்றித் திரிகின்றன. அந்த எட்டுக் கிரகங்கள் முறையே புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரானஸ் நெப்டியூன் என்பன. சூரியனிடத்திலிருந்து புதன் 3 கோடியே 60 லட்சம் மைல் தூரத்திலும், வெள்ளி 6 கோடியே 70 லட்சம் மைல் தூரத்திலும், பூமி 9 கோடியே 29 லட்சம் மைல் தூரத்திலும், செவ்வாய் 14 கோடியே 15 இலட்சம் மைல் தூரத்திலும், வியாழன் 48 கோடியே 33 இலட்சம் மைல் தூரத்திலும், சனி 88 கோடியே 60 இலட்சம் மைல் தூரத்திலும், யூரானஸ் 178 கோடியே 19 இலட்சம் மைல் தூரத்திலும், நெப்டியூன் 279 கோடியே 16 இலட்சம் மைல் தூரத்திலும, இருக்கின்றன. மேற்சொன்ன கிரகங்களில, புதன், வெள்ளி தவிர மற்றவைகளுக்கு உபக்கிரகங்களுமுண்டு. பூமிக்கு ஒரு உபக்கிரகம. அதுதான் சந்திரன். செவ்வாய்க்கு இரண்டு. வியாழனுக்கு எட்டு. சனிக்குப் பத்து. யூரானஸுக்கு நாலு. நெப்டியூனுக்கு ஒன்று.

இவ்வாறான சூரிய மண்டலம் வெகு விசாலமானதாயினும் அண்டத்துடன் ஒப்பிடின் ஒரு தூசு என்றே சொலலவேண்டும். ஏறக்குறைய 27 இலட்சம் மைல் சுற்றளவுள்ள சூரியன் வானவெளியிற் காணும் பலகோடி நட்சத்திரங்களிலொன்று. வேறு ஏதாவது நட்சத்திரத்திற்கு நாம் சென்று, அங்கிருந்து சூரியமண்டலத்தைப் பார்க்கில, சூரியன் ஒரு மின்மினி போலவும், அதைச்சுற்றியோடுங் கிரகங்கள் கண்ணுக்குத் தெரியாமலும் இருக்குமாம். மேலும் நம்முடைய சூரியன் தன்னைச்சேர்ந்தகிரக உபக்கிரகங்களுடன் மகரராசியருகில் தோன்றும் ஹேர்க்யூலிஸ் என்ற நட்சத்திரத்தை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதாகக் கணக்கிடுகிறார்கள்.

சென்ற 45 வருடங்களில் வான சாஸ்திரம் அடைந்திருக்கும் முன்னேற்றத்திற்களவில்லை. நட்சத்திரங்களின் தூரம், அவைகளின் பரிமாணம், சீதோஷ்ண நிலைமை முதலியன ஏறக்குறையச் சரியாக அளவிடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, மிதுன ராசியில் காணப்படும் திருவாதிரை நட்சத்திரம் பூமியிலிருந்து 160 ஒளி — வருஷ (Light Years) தூரத்திலிருக்கின்றதாம். ஒளி—வருஷமாவது யாதெனில், ஒளி ஒரு செக்கண்டுக்கு (18600 X60X60x24x365) மைல் செல்லும். அந்தத் தூரமே ஒரு—ஒளி வருஷமென்பது. அவ்வாறு 160 வருஷங்கள் சென்று திருவாதிரையின் ஒளி பூமியை யடைகின்றது. ஆதலால் நாம் இப்போது காணுந் திருவாதிரையை இன்றைக்கு 160 வருஷங்களுக்கு முன் அது எந்நிலையிலிருந்ததோ அந்நிலையிற்றான் காண்கிறோம். திருவாதிரையின் தற்போதைய நிலைமையை இன்னும் 160 வருஷங்கள் சென்றே காணமுடியும். மேலும் ஆதிரையின் பரிமாணம் சூரியமண்டலத்தின் [illegible] பங்கு என்றும், அது சூரிய மண்டலத்தினின்று ஒரு செக்கண்டுக்கு 15-மைல் விதம் பின்னடைகின்றது என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். துலா ராசியிலுள்ள சுவாதி நட்சத்திரம், பூமியிலிருந்து 25 ஒளி—வருஷ தூரத்திலுள்ளதென்றும், சூரியனைப்போல் ஈராயிரமடங்கு பிரகாசமுடையதென்றும், ஓர் செக்கண்டுக்கு 4-மைல் விதம் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்றும் கணித்திருக்கிறார்கள். புனர்பூசத்திற்குத் தெற்கில காணப்படும் 'செட்டி வெள்ளி (Sirius) என்ற நட்சத்திரம் பூமியிலிருந்து 8½ ஒளிவருஷ தூரத்திலிருக்கின்றதென்றும், அது சூரியனைப்போல் 20 மடங்கு பிரகாசமுள்ளதென்றும, ஓர் செக்கண்டுக்கு 9-மைல் விதம் பூமியை நோக்கி வந்துகொண்டிருக்கின்றது என்றும் சொல்லுகிறார்கள். தற்போதுள்ள விஞ்ஞானக் கருவிகள் மூலம் 10-கோடி ஒளி — வருஷ தூரமுள்ளவான வெளிச்சங்களைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. கருவிகள் இன்னும் திருத்தமடைந்தால் இன்னும் வெகு தூரத்திலிருக்கும் வான வெளிச்சங்களைக் காணவியலும்.

ஆகவே, பழைய காலத்தில் மனிதனுக்குத் தெரிந்த அண்டத்திற்கும், தற்காலம் விஞ்ஞானமூலம் கணக்கிடும் அண்டத்திற்கும் எவ்வளவு வித்தியாசமென்று பாருங்கள்! விஞ்ஞான அறிவு வளர்ந்து வளர்ந்துவர,

அண்டத்தின் வெளிப்பரப்பும் வளர்ந்து வருகிறது. ஒரு பிரபலவான சாஸ்திரி சொல்லுவது போல் அண்டத்தின் மத்தியம் எங்குமிருக்கின்றது, அண்டத்தின் அந்தம் எங்குமில்லை. ஆகாய வெளி (Space) நிரந்தரமாக வளர்ந்துகொண்டேயிருக்கிறதென்றும், அது எல்லையற்றதென்றும் விஞ்ஞானிகள் நினைக்கின்றார்கள். இந்த அண்டம் அகலும் வேகம் ஒளியின் வேகத்தைக் காட்டிலும் கூடினது என்றும், இந்த வெளியின் பிராந்தத்தை (circumference) ஒரு செக்கண்டுக்கு 186000 மைல் வீதஞ் செல்லுகின்ற ஒளியாலும் பின் தொடர வியலாதென்றும் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். ✲

## கலைச் செல்வி

—

நகைச்சுவை அரசர் என். எஸ். கே. அவர்களின் அருமைப்புதல்வி கலைச்செல்வி கடந்த 18—6—48-ல் இயற்கை எய்திவிட்டதென்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். கலைவாணரும் அவரது துணைவியார் மதுரம் அம்மையாரும் நாட்டுக்கு ஊட்டிவரும் நல்லறிவுப் பணிக்குக் கலைச் செல்வியும் துணையாய் நின்று, கலை உலகின் கண்மணி என விளங்குவாள் என்று எண்ணினோம்—ஏமாந்தோம். கலைச் செல்வியைப் பிரிந்து கவலைக்குள்ளாகி இருக்கும் கலைவாணருக்கும் மதுரம் அம்மையாருக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

## அகதிகளுக்கு வேலை

—✲—

கிழக்குப் பஞ்சாப், ஐக்கிய மாகாண மேல் பகுதி, டில்லி ஆகிய பிரதேசங்களிலிருந்து வெளியேறிச் சென்றுவிட்ட முஸ்லீம்கள் விட்டுச் சென்ற எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன. அகதிகள் அத்தொழில்களை மேற்கொள்ளுமாறு செய்து, ஆளில்லாது தடைப்பட்டு நிற்கும் அத்தொழில்களை மீண்டும் உயிர்ப்பிப்பதற்காக அகதிகளுக்கு அத்துறைகளில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு நிலையங்களிலுமாக மொத்தம் 7,000 அகதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை சீரமைப்பு—வேலையளிப்பு டைரெக்டரேட் செய்திருக்கிறது.

இத்துடன், கிழக்குப் பஞ்சாபில் ஏராளமான நூல் நூற்பு நிலையங்களும் நெசவு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கர்னால் ஜில்லாவில் உள்ள பானிபட்டில் முன்பு குடியிருந்து வெளியேறிவிட்ட முஸ்லீம்கள் பிரதானமாய் ஈடுபட்டிருந்த நூற்ற—நெசவுத் தொழிலில் அகதிகளை ஈடுபடுமாறு செய்வதற்காக புதிய குடியிருப்பு நகர் ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டிருக்கிறது.


ஒவ்வொரு அகதியும் தன் ஜீவிதத்துக்கு வழி தேடுவதற்காக உழைத்துத்தான் ஆகவேண்டும் என்ற கொள்கையைக் கிழக்குப் பஞ்சாப் சர்க்கார் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். அகதிகளை, வேலையிலீடுபடக் கூடியவர்கள், வேலையிலீடுபடுத்த முடியாதவர்கள் என்று இரு பிரதான பிரிவாகப் பிரித்துக் கணக்கிடுவதற்காக நிர்வாகக் கிளை நிலையங்களை அமைக்குமபடி சீரமைப்பு—வேலையளிப்பு டைரெக்டரேட் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

வேலை பார்க்கத் தகுதியுள்ள சகல அகதிகளுக்கும் இந்த டைரெக்டரேட் எல்லா உதவிகளையும் செய்து வரும். மற்றவர்கள் விஷயத்தில், இலாபகரமான தொழில்களில் அவர்கள் ஈடுபடாதிருப்பதற்கும் வேலை செய்யக்கூடாமைக்கும் ஏதுவான காரணங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகு, வேலையில்லாதிருப்பதுபற்றிய அத்தாட்சிப் பத்திரத்தை அது வழங்கும்.

இந்த அத்தாட்சிப்பத்திரங்களைப் பொறுத்துத்தான் அகதிகளுக்கு உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படும்.

இந்தக் காரியத்துக்காக, ஒவ்வொரு முகாமிலும் வேலையளிப்புக் காரியாலயங்கள் ஏற்படுத்தப்பட்டு, பதிவு செய்யும் வேலையும் தொடங்கப்பட்டுவிட்டது. கிழக்குப் பஞ்சாபில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் உடனடியாக 50,000 பேர் அமர்த்திக் கொள்ளப்படுவார்கள்; வேலை விருத்தியடையுந்தோறும் தொழிலாளரும் அதிகமாகத் தேவைப்படுவார்கள்.

✲



## இலாபத் தொழிலுக்கு

4-ம் பக்கத் தொடர்ச்சி

லது வெளியேற்றத்தினாலோ அறைகள் காலியாகும்போது, அதுவிஷயம் வீடுகள் கவனிப்பு இலாகாவிற்கு தெரிவிக்கப்படுவதில்லை. இதற்கிடையே விவாகரத்துச் செய்து கொள்ளும் தம்பதிகள் ஒரே அறையிலேயே வசிக்கின்றனர்.

மாஸ்கோவுக்குப் புதிதாக வரும் ஒரு நபர் தமது பழைய நண்பர் ஒருவரைத் தேடிப்பிடித்து எப்படியாவது அவருடைய அறையில் தமக்கும் குடியிருப்பு வசதி பெற்றுவிடுகிறார். இது தவிர, மாஸ்கோவில் பல்லாயிரக்கணக்கானவர்கள், அறைகள் பெற முடியாமல் தவிக்கின்றனர். காரணம் மாஸ்கோவில் வசிக்க அவர்களுக்கு சட்ட பூர்வமான உரிமையில்லை. இவ்விதமானவர்களில் ஒருவரான ஒரு பெண் 6 மாதகாலம்வரை ஒரு நண்பருடைய ஹோட்டல் அறையில் குடியிருந்த பின்னர் சொந்தத்திற்கு ஒரு அறையைத்தேடிக்கொண்டாள். அவளுக்குக் கிடைத்த அறையின் வாடகை மிக மிகச் சொற்பமானதாயிருந்தது.

அரிய சாமான்களில் ஏதாவதொன்றைப் பெற்றிருக்கும் ஒருவர் தாம் நினைத்த விலைக்கு அதை விற்கிறார். சோவியத் யூனியனிலோ அரிய பொருள்களின் ஜாப்தா முடிவற்றதாயிருக்கிறது. ஜெர்மனியிலுள்ள ருஷ்ய சோல்ஜர்கள் கைக்கடியாரங்கள்மீது அபார மோகங்கொண்டுள்ளனர். இதற்குக்காரணம் மணி பார்க்க வேண்டுமென்ற அக்கரையல்ல. நல்லகடிகாரங்கள் 3000 ரூபிளுக்குவிற்கப்படுகின்றன. ருஷ்ய சோல்ஜர்களின் மோகத்திற்குக் காரணம் அதுதான். ஒரு நல்ல புகைக்குழாய், ஒரு அழகிய நெக்டை அல்லது அமெரிக்கா லிப்ஸ்டிக் ஆகியவற்றின் விலை இரண்டுவாரச் சம்பாத்தியத்திற்கு சமமானதாயிருக்கிறது. "அமெரிக்கா" என்ற அமெரிக்க பிரசார சஞ்சிகை 10 ரூபிளுக்கு விற்கப்படுகிறது. ஆனால், இந்தச்சஞ்சிகையின் பிரதிகள் வாசகசாலைகளுக்கும், ஆஸ்பத்திரிகளுக்கும், கிளப்புகளுக்கும், ஒருசில உயர்தர அதிகாரிகளுக்கும் மட்டும்தான் கிடைக்கின்றன. வெளியுலகத்தைப் பற்றியசெய்திகள்மீது ஏற்பட்டுள்ள ஆர்வத்தினாலும், இந்தச் சஞ்சிகை அழகிய தோற்றமுடையதாயிருப்பதினாலும், இதன் பிரதிபொன்று சிலஇடங்களில் 80 ரூபிளுக்கு விற்கப்படுகிறது. இந்தச் சஞ்சிகையைக் கொண்டு இன்னும் என்னென்ன காரியங்களையெல்லாமோ சாதித்துக் கொள்ளலாம். உதாரணமாக, ஒரு தியேட்டரில் டிக்கெட்விற்றுமுடிந்துவிட்டதாக வைத்துக்கொள்வோம். அப்போது இந்தச் சஞ்சிகையின் பிரதி ஒன்றைக்கொடுத்தால்உடனே டிக்கெட் கிடைத்துவிடும்; பேட்டி காணத்தக்க ஒருவரைபார்க்கவேண்டுமானால் இந்தச் சஞ்சிகையைக் கொண்டு அதைச் சாதித்துக்கொள்ளலாம்.

ஆனால், சோவியத் யூனியனில் பணம் சம்பாதிப்பதற்கு வியாபாரம் ஒன்றுதான் மார்க்கம் என்று நினைக்கவேண்டாம். ஒரு தனிநபரின் ஊக்கத்தை ஒரு முயற்சியில் செலுத்துவதற்கு பணத்தூண்டுதல்தான் சரியான வழிஎன்று சோவியத் அரசாங்கம் திடநம்பிக்கைக் கொண்டிருக்கிறது. உற்பத்தி முயற்சியின் ஒவ்வொரு துறையிலும் நேர்த்தியான வேலைக்கு அரிய சன்மானங்களை அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. இந்தச்சன்மானங்கள் தொழிலாளர்களுக்குத் தூண்டுகோலாயிருக்கின்றன. அனேகமாய் சகல தொழிலாளர்களுக்கும் அந்தக்கூலி அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஸ்டக்கனோவைட் தொழிலாளர்கள் (சராசரி உற்பத்தியாளர்களைவிட) சிறந்த வாழ்க்கை நடத்துகின்றனர். அவர்களுடைய வாழ்க்கை நிலைக்கும் சராசரி ருஷ்யத் தொழிலாளியின் வாழ்க்கைநிலைக்கு மிடையேயுள்ள வித்தியாசம், அமெரிக்காவில் கைதேர்ந்த இயந்திரத்தொழிலாளியின் வாழ்க்கைநிலைக்கும் சம்பளத் தொழிலாளியின் வாழ்க்கை நிலைக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை ஒத்ததாயிருக்கிறது. கைத்தொழில் பெருக்கத்தில் தீவிரமான கவனஞ்செலுத்தி வரும் ருஷ்யாவில் தொழிற்சாலை மானேஜர்களுக்கும், இஞ்சினியர்களுக்கும் எப்போதும் கிராக்கி இருந்து வரவே செய்கிறது. திறமைசாலிகள் எந்த விதத்தில் பார்த்தாலும் பணக்காரர்களாகவேயிருக்கின்றனர்.

சோவியத் யூனியனில் எழுத்தாளர்களும்பாட்டு இயற்றுவோரும் நல்ல ஊதியம் பெறுகின்றனர். வழக்கமாக அவர்கள் தங்களை நிரந்தரமாய் வேலைக்கு வைத்திருக்கும் ஒரு ஸ்தாபனத்தினிடமிருந்து அடிப்படைச் சம்பளம் பெறுகின்றனர். உதாரணமாக, ஒரு எழுத்தாளர் ஒரு பத்திரிகைக்கு நிருபராகவோ அல்லது ஒரு சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவராகவோ இருக்கலாம். அவருடைய அடிப்படைச் சம்பளம் அவரது வருமானத்தின் மிகச்சிறிய பகுதியாகவேயிருக்கிறது. அவருடைய கட்டுரைகளை பிரசுரிக்க விரும்பும் இதர எந்தவொரு பத்திரிகையும் அதற்குப் பணம்கொடுக்க வேண்டும். இது தவிர, தம்மால் எழுதப்படும் நூல்களுக்கு அவர் ராயல்டி பெறுகிறார். இந்த 'ராயல்டி' தொகையின் அளவானது, புத்தகத்தின் பக்கங்கள், பதிப்பின் அளவு, எத்தனை சோவியத் மொழிகளில் அது மொழிபெயர்க்கப்படுகிறது என்பனவற்றைப் பொறுத்திருக்கிறது. இந்த ராயல்டி ஏற்பாடுகள் முதலாளித்துவ நாடுகளில் போல, நூலாசிரியருக்கும் பிரசுரகர்த்தாவுக்குமிடையே சட்ட பூர்வமான உடன்படிக்கைகள் மூலம் செய்துகொள்ளப் படுகின்றன. இரண்டு அர்த்தம் கொள்வதற்கு கொஞ்சங்கூட இடமில்லாதபடி உடன்படிக்கையின் ஒவ்வொரு வார்த்தையும் வெகு எச்சரிக்கையோடு உபயோகிக்கப்படுகிறது. ஒரு பிரபல எழுத்தாளர் ரேடியோ சொற்பொழிவுகள் மூலமாகவும் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். அன்னிய நாடுகளில் பிரசுரிக்கப்படும் தமது நூல்கள் மூலமாகத் தமக்குக்கிடைக்கும் பணத்தை ஒரு எழுத்தாளர் தமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது சந்தர்ப்பம் கிடைக்கும் இடத்தில் செலவுசெய்து கொள்ளலாம். கான்ஸ்டான்டின் ஸிமினேவ் என்ற எழுத்தாளர் தமது சமீபத்திய அமெரிக்க விஜயத்தின்போது ஒரு "பியூக்" கார்வாங்கினர். பிரபல மாஸ்கோ நூலாசிரியர்களில் பெரும்பாலோர் நாட்டுப்புறங்களில் வசதிமிக்கவீடுகளைப்பெற்றுள்ளனர்.

டாக்டர்களுக்கூட பணக்காரர்களாக ஆக இடமிருக்கிறது. அவர்கள் அனைவரும் தங்களுடைய நேரத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியை ஆஸ்பத்திரி வேலையில் செலவுசெய்ய வேண்டியது அவசியமாகும். அதற்கு அவர்கள் சம்பளம் பெறுகின்றனர். ஆனால், அவர்கள் பிரத்தியேகஆலோசனைகளுக்குப்பிரத்தியேககட்டணம் பெற்றுக்கொள்கின்றனர். வைத்திய

சிகிச்சையை நாடி நிற்கும் ஒரு சோவியத் பிரஜை பணச்செலவின்றி அதைப்பெறலாம். அல்லது பெயருக்கு ஏதோ ஒரு தொகையைக் கொடுத்து அதைப்பெறலாம். ஏனெனில், வைத்திய சிகிச்சை அரசாங்கத்தினால் அளிக்கப்படுகிறது. ஆனால் அவர் தமக்குப் பிடித்த ஒரு டாக்டரைக்கலந்தாலோசிக்கவிரும்பினால் அதற்குரிய பணத்தை அவரே செலுத்தவேண்டும்.

நடன மாதர்கள், சினிமா நக்ஷத்திரங்கள் ஆகியோரும் நல்ல சௌகரியமான வாழ்க்கை நடத்துகின்றனர். நடிப்பைக் கற்றுக் கொள்வதற்காக சிறு பருவத்திலேயே இவர்கள் பிரத்தியேகமான பள்ளிக்கூடங்களுக்குச் செல்லுகின்றனர். பிற்பாடு அவர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக ஒரு கணிசமான தொகை அளிக்கப்படுகிறது. அவர்கள் விசேஷ கச்சேரிகள் மூலமாகவும், வானொலி நிகழ்ச்சிகள் மூலமாகவும் பணம் சம்பாதிக்கின்றனர்.

ஒரு ஆராய்ச்சியாளரோ, அல்லது பூமி சாஸ்திர நிபுணரோ திடீரெனப் பணக்காரராகிவிடலாம். ஒரு கருவியைச் சிறந்த முறையில் செய்வதற்கான ஒருமார்க்கத்தையோ அல்லது ஒரு புதிய ஈயச் சுரங்கத்தையோ கண்டுபிடிப்பவர்க்கு அரசாங்கமானது பிறர் பார்த்துப் பொருமைப்படத்தக்க பரிசுகளை அளிக்கிறது. இவ்விதமானபரிசுகளின் விவரம் நாடுமுழுதும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகிறது. ஏனெனில் இந்தப் பரிசுகளின் பிரதான நோக்கம் ஜனங்களிடத்தில் ஒரு முயற்சியைத் தூண்டி விடுவதேயாகும். இவ்விதமான சாதனைகளுக்கு அளிக்கப்படும் பணங்கள் வருமான வரி விதிப்புக்கு உட்படுவதில்லை.

சோவியத் யூனியனில் எழுத்தாளர்கள், கலைஞர்கள், பாட்டு இயற்றுவோர் நடனமாதர்கள், சினிமா நக்ஷத்திரங்கள், தொழிற்சாலை மானேஜர், இஞ்சினியர்கள் ஆகியோர் அதிக வருமானம் பெறுகின்றனர். டாக்டர்கள், லாயர்கள், இராணுவ கடற்படை ஆபீசர்கள், தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள், புதிதாக நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டுள்ள மத்திய ஆசியாவில் வசிக்கும் விவசாயிகள் போன்றவர்கள், எழுத்தாளர்கள் முதலியோரோடு ஒப்பிடுகையில் மிகக் குறைந்த வருமானமே பெறுகின்றனர். காரியலய குமாஸ்தாக்கள், இராணுவ சேவையாளர்கள், விவசாயிகளில் பெரும்பாலோர், தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் ஆகியோர் இவர்களைவிட மிகக் குறைந்த வருமானம் பெறுகின்றனர். இரண்டு வருடங்கட்கு முன் வரை உபாத்தியாயர்களின் நிலைமையும் இவர்களுடன் சேர்க்கப்படவேண்டியதாகவேயிருந்தது. எனினும் அவர்களுடைய சம்பளம் திடீரென்று கூட்டப்பட்டதின் விளைவாக அவர்களுடைய வருமானம் இரண்டாவது பிரிவினரின் வருமானத்திற்குச் சமமாகியிருக்கிறது.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளோடு ஒப்பிடுகையில் சோவியத் யூனியன் அவ்வளவு கடுமையாக வருமானவரி விதிக்கவில்லை. சாதாரணத் தொழிலாளர்கள், காரியாலய குமஸ்தாக்கள் ஆகியோர் விஷயத்தில் 2 சதவிகிதம் முதல் 7 சதவிகிதம் வரை வரிவிதிக்கப்படுகிறது. மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை பராமரிக்க வேண்டிய நிலையில் இருப்பவர்கள் விஷயத்தில் 30 சதவிகிதம் கழித்துக்கொள்ளப்படுகிறது. எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோர்கள் விஷயத்தில், 300,000 ரூபிள் அல்லது அதற்கு மேற்பட்ட வருட வருமானத்திற்கு கூடின பக்ஷம் 50 சதவிகிதம் வரை வரி விதிக்கப்படுகிறது.

ஒரு கூட்டுப்பண்ணையின் இலாபத்தில் விவசாயிகளுடைய பங்காக அவர்களுக்குக் கிடைக்கும் வருமானத்தின் மீது வரி விதிக்கப்படுவதில்லை. ஆனால் அவர்களுடைய சொந்தப் பண்ணைகளின் வருமானத்திற்கு வரி விதிக்கப்படுகிறது. 8000 ரூபிளுக்கு மேற்பட்ட வருடவருமானத்திற்கு கூடின பக்ஷ வரி 30 சதவிகிதமாகும். 1942—ம் வருடத்திலிருந்து பிதுரார்ஜித சொத்து வரி இரத்தாக்கப்பட்டுவிட்டது.

[தமிழ் முரசு]

# அந்த "யாரோ சிலர்"

சென்னை சர்க்கார், தமிழ்நாட்டில் இந்தியை விருப்ப பாடமாக ஆக்கியிருக்கிறது. இது, உண்மையிலேயே பாராட்டக்கூடியதுமட்டுமன்று; சென்னை சர்க்கார் திரயோசித்துச் செய்த இந்தக்காரியம், தமிழ்மக்கள் அனைவராலும் பெரிதும் வரவேற்கப்பட்டு அதற்காக நன்றி செலுத்தவும் கடமைப்படக் கூடியதாகும். ஆண் பெண் உட்பட ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களைச்சிறைக்கு அனுப்பியும், இரு இளைஞர்களின் உயிரைப் பலி வாங்கியும், விருப்ப பாடமாக்கப்பட்ட இந்தியை, மீண்டும் கட்டாயப்படுத்துவது முறையும், நேர்மையும் அல்ல என்பதைச் சர்க்கார் நன்கு உணர்ந்ததாலேயே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அதனைக் கட்டாயபாடமாக்காமல்விருப்பபாடமாக ஆக்கியிருக்கின்றனர். சர்க்காருக்கு அவசியமற்ற தொல்லையை உண்டாக்க வேண்டுமென்று கருதுபவர்களைத் தவிர, வேறு எவரும் சர்க்காரின் இந்தத்திட்டத்தைத் தவறென்று கூறமாட்டார்கள்.

இனி, ஆந்திரா, கேரளம், ஆகிய பகுதிகளில் இந்தியைக் கட்டாயபாடமாக்கிவிட்டுத் தமிழ்நாட்டில்மட்டும் அதனை ஏன் விருப்ப பாடமாக்க வேண்டுமென்று சிலர் கேட்கின்றனர். சில பத்திரிகைகளும் இதுபற்றி எழுதின, சர்க்காரின் இத்திட்டத்தைக்கண்டிக்கும் முறையில். கல்வி அமைச்சர், பத்திரிகைகளுக்குப்பதிலளிக்கும் முறையில், தம்முடைய கருத்தையும் சர்க்காரின் முடிவையும் நன்கு தெளிவுபடுத்தியும் இருக்கிறார். இந்த நிலையில், "எருதுப்புண் காக்கை அறியாது" என்பதுபோல், 20-6-48ல் சென்னையில் கூடிய காங்கிரஸ் அரசியல் மாநாட்டிலும் சர்க்காரின் இத்திட்டம் கண்டிக்கப்பட்டிருக்கிறது. மாநாட்டுக்குத் தலைமை வகித்த தோழர் முத்துரங்கம் அவர்கள்,

"யாரோ சிலர் சொல்லுகிறார்கள் என்பதற்காகச் சர்க்கார் இப்படிச் செய்யலாகாது. சர்க்கார் தைரியத்துடன், தங்கள் கொள்கைகளை நடைமுறைக்குக்கொண்டுவர வேண்டும். 'இந்தியை விருப்ப பாடமாக்கினால் எல்லோரையும் கற்கும் படி சொல்கிறோம்; கட்டாயமாக்கினால் எதிர்ப்புக் கிளர்ச்சி

"நடத்துவோம்' என்று, கூறுகிறவர்களைக் கண்டு அஞ்சக் கூடாது"

என்று பேசியிருக்கிறார். தோழர் முத்துரங்கம் அவர்களால் கருதப்படும் அந்த 'யாரோ சிலர்' யார் என்பதை இதற்குள்ளாக அவர் எப்படி மறந்துவிட்டார் என்று தெரியவில்லை. ஆனால், சர்க்கார் மட்டும், அந்த 'யாரோ சிலரை' நன்கு அறிந்திருக்கிறார்கள். அவர்கள் யார்? எப்படிப்பட்டவர்கள்? இந்தியைத் தமிழ்நாட்டில் கட்டாயபாடமாக்கக் கூடாதென்று ஏன் கூறுகின்றார்கள்? அவர்கள் கூறுவது நியாயமா அல்லவா என்பன எல்லாம் சர்க்காருக்குத் தெரிந்ததால்தான், சர்க்கார் தமிழ்நாட்டில் இந்தியை விருப்பபாடமாக்கியுள்ளனர். இதற்குமுன் ஒரு முறை நன்கு அறிந்த அந்த 'யாரோ சிலரை'த் தோழர் முத்துரங்கம் போன்றோர் மீண்டும் ஒருமுறை அறிய விரும்பவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

இனி, "ஆந்திர, கேரளப் பகுதிகளுக்கு இந்தியைக் கட்டாயபாடமாக்கிவிட்டுத், தமிழ் நாட்டுக்கு அதை விருப்பபாடமாக்கியது நியாயமும் நேர்மையுமல்ல; மாகாணம் முழுவதும் இந்தி கட்டாயபாடமாக இருக்கவேண்டும்; அல்லது அது எங்கும் விருப்பபாடமாக ஆக்கப்படவேண்டும்" என்றும், தோழர் முத்துரங்கம் அவர்கள் பேசியிருக்கிறார்.

ஆந்திரரும், கேரளரும், கன்னடியரும் இந்தியைக் கட்டாயக் கல்வியாகக் கற்றுக்கொள்ளுமாறு சர்க்கார் வற்புறுத்துகின்றனரா? அல்லது அவர்களே அந்த மொழியைக் கட்டாயமாகக் கற்றுக்கொள்ள விரும்புகின்றனரா? என்பதைக் கவனிக்கும்போது, ஆந்திரரும், கேரளரும், கன்னடியரும், இந்தி மொழி கட்டாயபாடமாவதை எதிர்க்கவில்லை என்றே தெரிகிறது. 1938ல் இந்திமொழி கட்டாயபாடமாக ஆக்கப்பட்ட போது கூட அவர்கள் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டிக்கொள்ளவில்லை. எனவே அவர்கள், இந்தி கற்பதை விரும்புகின்றனர் என்று சர்க்கார் கருதியதால்தான், அவர்களுக்கு அதைக் கட்டாயபாடமாக வைத்துள்ளனர். ஆனால், தமிழ் மக்கள், இந்தி கட்டாய பாடமாக்கப்படுவதை எப்போதுமே விரும்பவில்லை. எனவேதான், சர்க்கார், ஆந்திர கேரளப்பகுதிகளுக்கு இந்தியைக் கட்டாய பாடமாகவும், தமிழ் நாட்டுக்கு அதை விருப்ப பாடமாகவும் ஆக்கியுள்ளனர். இந்த நிலையில், "யாரோ சிலர் சொல்கிறார்கள் என்பதற்காகச் சர்க்கார் இப்படிச் செய்யக்கூடாது" என்ற யோசனையைத் தோழர் முத்துரங்கம் அவர்கள் சர்க்காருக்குக் கூறிவிட்டால், சர்க்கார் ஒருவேளை தங்களுடைய திட்டத்தை மாற்றி அமைத்துவிடும் என்று அவர் கருதுகிறார்போலும்! ஆனால் சர்க்கார், நிலைமையை நன்கு பரிசீலனை செய்தபின்னரே, தமிழ் நாட்டில் இந்தியை விருப்பபாடமாக ஆக்குவதென்ற முடிவுக்கு வந்து அவ்விதம் செய்துள்ளனர் என்பதைத் தோழர் முத்துரங்கம் அவர்கள் அறியும்படி செய்வது நம் முடையகடமையாகும். அதோடு, தமிழ்நாட்டில் இந்திமொழியைக் கட்டாயபாடமாக்குவது கூடாது என்பதற்குரிய சில குறிப்புகளையும் வெளியிட்டுத், தமிழ்நாட்டில் இந்தி கட்டாயபாடமாக இருக்க வேண்டுமென்று கருதுபவர்கள் தங்களுடைய தவறை உணரும்படி செய்வதும் இன்றியமையாததாகும்.

வட இந்தியருள்ளும் ஒரு சிறு பகுதியினரால் மட்டும் பலப்பல மாறுதல்களுடன் பேசப்படுவதும், இற்றைக்கு 500 ஆண்டுகளுக்குள்ளாகவே சமஸ்கிருதம் உருது முதலான மொழிகளிலிருந்து எடுக்கப்பட்ட சில எழுத்துக்களையும் சொற்களையும் கொண்டு உண்டாக்கப்பட்டதும், பழைய அறிவு நூற்செல்வம் இல்லாததுமான ஒரு கலப்புச் சிதைவு மொழியாகிய இந்தி மொழியை இவ் இந்தியா முழுவதுக்கும் பொதுமொழியாக வைத்துவிடலாம் என்பது ஒரு சிலரின் நோக்கம். இவ்வாறான ஏழை மொழியாகிய ஒரு புது மொழியை இந்தியாவிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாய பாடமாக்கி அதை இந்தியாவிற்கே ஒரு பொது மொழியாக்கி விடலாம் என்று நினைந்து, அத்துறையில் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் சில தலைவர்கள் நாம் கீழே தரும் வினாக்களுக்குத் தக்க சான்றுகளுடன் விடைகள் அளித்தபின்பே அவர்கள் அதை நம் மக்கட்குக் கட்டாயப்படுத்தும் பெரு முயற்சியில் ஈடுபட வேணுமாய் விண்ணப்பித்துக்கொள்கின்றோம்:-

தமிழ் நாடல்லாத வேறெந்த நாட்டிலாவது அவர்களின் தாய் மொழியை நீக்கி வேறொரு அயல் மொழியைக் கட்டாய பாடமாக வைத்துக் கற்பிக்கப்படுகின்றதா? அங்ஙனமாயின் எந்த நாட்டில் எம் மொழி என்பதைத் தக்க சான்றுகளுடன் விளக்கிக் காட்டுக!

இந்தி மொழியை இந்தியா முழுவதுக்கும் பொது மொழியாக்குவதினின்றும் மக்களிடையேயுள்ள பிளவுகள் நீங்கி ஒற்றுமை உண்டாகும் என்னும் கூற்றுக்கு யாதாயினும் சான்று காட்டி அதை மெய்ப்பிக்க முடியுமா?

ஒரு மொழியையே பேசும் ஒரு நாட்டவரிடையே பலவகைப்பட்ட பிளவுகளும் சச்சரவுகளும் காணப்படும் நிலைமையில், பல மொழிகளைப் பேசும் பல நாட்டவரையும் ஒரு பொது மொழி கற்பதால் ஒற்றுமையாக்கி விடலாமென்று கருதிப் பாடுபடுவது "உமிக் குற்றிக் கை சலித்த" பான்மையாக முடியுமல்லது அதனால் யாதும் பயன் விளையுமென்று சொல்ல முடியுமா?

இப்போது ஒரு மொழியையே (ஆங்கிலத்தையே) பொதுமொழியாக வைத்துப் பேசிவரும் இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்து ஆகிய மூன்று தீவுகளிலுமுள்ள நாலேகாற்கோடி மக்களுள்ளும் பிளவுகளும் சச்சரவுகளும் இல்லாமலா இருக்கிறது?

இந்தியாவில் உள்ளவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினரால் அதாவது 25 கோடி மக்களால் இந்தி மொழி பேசப்பட்டு வருகின்றதென்னுங் கூற்றுக்குத் தக்க ஆதாரங்களுடன் எந்த ஆண்டிலாவது எடுக்கப்பட்ட இந்தியக் குடிக்கணக்கின்படி புள்ளி போட்டுக் காட்ட முடியுமா? அல்லது இப்பெரும் பொய்யை மறைக்கும் ஆற்றலாவது எவருக்கேனும் உண்டா?

இப்போது சற்றேறக்குறைய 16 கோடி மக்களாற் பேசப்படுவதும், உலகப் பொதுமொழியெனச் செல்வாக்குப் பெற்றுத் திகழ்வதும், கடந்த 150 ஆண்டுகளாக இந்தியா முழுவதிலும் உள்ள எல்லா வகை அலுவல் நிலையங்களிலும் வைத்து வழங்கப்பட்டு வருவதும் ஆன ஆங்கில மொழியின் உதவிகொண்டே நம் நாட்டு மக்கள் ஒருவருடன் ஒருவர் கலந்து பேசி அளவளாவ முடி

பாத நிலைமையில்—ஒருவர் ஆங்கிலத்தில் பேசினால் அதன் பொருளை அறிந்துகொள்ள முடியாது திகைக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணப்படும் இந்த நிலைமையில், இனிப் புதிதாக ஒரு பொது மொழியைக் கற்று அதன் வாயிலாக இந்திய மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் அளவளாவி ஒற்றுமையுடன் இனிது வாழலாம் என்று கருதுவது யாங்ஙனம் இயலும்?

நம் இந்திய மக்கள் நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இந்தி மொழியைக் கற்றுக்கொண்டாலும், அதன் உதவி கொண்டு இப்போதைய நிலையைப் பார்க்கிலும் ஒரு கடுகளவாவது உயர்ந்து செல்ல இடம் உண்டாகுமா? அல்லது இந்தி மொழியில் உயர் நிலையை அடைய வழி காட்டும் ஏதொரு நூலாவது உண்டா? அங்ஙனம் உளதாயின் அந்நூலின் பெயர்தான் யாதோ?

நமது செந்தமிழ் மொழியின் பழைமை, இளமை, இனிமை முதலிய மேதக்க பெருமைகளையும் அம்மொழியின்கண் மிளிரும் ஒப்புயர்வற்ற விழுமிய கருத்துக்களோடு கூடிய அரும்பெரும் நூல்களையும் 7000, 8000 கல் தொலைவிற்கு அப்பால் உள்ள மேனாட்டு ஆங்கிலேயர், ஜர்மனியர் முதலான மக்கள் பேசியும் கற்றும் வருதலோடு, தத்தம் மொழிகளிலும் அந்நூல்களை மொழி பெயர்த்து விளக்கவுரைகளும் எழுதி அவற்றிற்குத் தக்க பெருமை அளிக்கும்போது, நமக்கு மிக நெருங்கிய தொடர்புடையவர்களான 400, 500 கல் தொலைவிலிருக்கும் நம் வட இந்தியர்கள் மட்டும் நம் மொழியையோ அல்லது அதன்கண் உள்ள நூல்களையோ ஒரு சிறிதும் கண்ணெடுத்துப் பாராமல் இருப்பதன் காரணம், அவர்களுக்கு நம்மீதும், நம் மொழியின்மீதும, நம் மொழியின்கண் உள்ள சிறந்த நூல்களின் மீதும் உள்ள அழுக்காறும், மனக்காழ்ப்பும் பொறாமையுமே யல்லாது வேறு ஏதாவது காரணம் இருக்கிறதாக கூற எவருக்கேனும் நாவெழுமா?

இந்திய நாட்டின் ஒரு பகுதியினரான வடவர்களுக்கே நம்மீதும் நம் மொழியின்மீதும் நல்லபிப்பிராயம் இல்லாமல் இருக்கும்பொழுது, நாம் மட்டும் அவர்களுக்கு நனமதிப்புக் கொடுத்து அவர்கள் மொழியைக் கட்டாயமாகக் கற்கவேண்டுமென்று நம் நாட்டுத் தலைவர்களிற் சிலர் இப்போதும் மடிகட்டி நின்று பிடிவாதஞ் செய்வதன் பொருள்தான் யாதோ?

தென்னாட்டவர்கள் இந்தி கற்றுவிட்டால் வ நாடு சென்று உததியோகம் பார்க்க வசதியாய் இருக்குமென்று சிலர் கூறுகின்றனர். அங்ஙனமாயின், இப்போது வடநாட்டிலுள்ள இந்தி சற்ற அத்தனை பேரும் உத்தியோகத்தில் அமர்ந்து தான் இருக்கிறார்களா? வட இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் என்பது அறவே இல்லையா?

தென்னாட்டில் இந்தி இயக்கம் தொடங்கியதிலிருந்து வடநாட்டிலுள்ள பலர் தென்னாட்டவர்கள் இந்தி கற்றுவிட்டால், அவர்கள் நம் நாட்டுக்கு வந்து உத்தியோக வேட்டையாட முயல்வார்களே, அப்போது எங்கள்பாடு திண்டாட்டமாய் முடியுமே என்ற கிளர்ச்சியைச் செய்து வருகிறார்களாமே! அது உண்மையா அல்லது பொய்யா?

தமிழ்மக்கள் இந்தி கற்றுக்கொண்டாலும், கற்றவர்களில் நூற்றுக்கு எத்தனை பேருக்கு வடநாட்டில் உத்தியோகம் கிடைக்கும்?

இஞ்ஞான்றைத் தமிழ்மக்கள்பலர் பெங்களூர், மைசூர், சிகந்தராபாக்கம், பூனா, பம்பாய், கல்கத்தா, கராச்சி, காசி, காக்கிநாடா, நெல்லூர் முதலான வடஇந்தியாவின் பற்பல ஊர்களிலுஞ்சென்று, அங்கு தம் வாணிக வாழ்க்கையிற் சிறப்பெய்தி இருக்கின்றனரே! இம்மேலே குறிப்பிட்ட ஊர்களிலவைகிவாழ்ந்து வரும் நந்தமிழ்மொழி பேசும்தமிழ் மக்கள் எல்லோரும் தமக்கு ஒரு பொதுமொழி இல்லாததனால், தாம் நடாத்தும் வாணிக வாழ்க்கைக்கு ஏதேதோ இடையூறுகள் ஏற்படுவதாகவும், அதனால தமக்கும் தாம் சென்று உறையும் ஊர்களில் இருப்பவர்கட்கும் பொதுமொழியாக இந்தி மொழியை ஆக்கி உதவவேண்டுமென்று முறையிட்டு விண்ணப்பித்துக் கொண்டார்களா?

அல்லது வடஇந்தியாவின் பற்பல பகுதிகளின் பற்பல மொழிகளைப் பேசுபவர்களான பெருந்தொகை மக்கள் நந்தமிழ் நாட்டின்கண் உள்ள பற்பல ஊர்களிலும் வந்திருந்து வாணிகம் முதலான தொழில்களைச் செய்கிறார்களே! அவர்களாவது தங்களின் வாணிகவாழ்க்கைத்துறைகளிற் பயன்படுத்திப் பேசுவதற்காக இந்தியைப்: பொதுமொழியாக்கி உதவவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்களா?

இங்ஙனம் தென்னாடிருந்து வடநாடு சென்று உறையும் தமிழராவது, அல்லது வடநாட்டிலிருந்து தென்னாடு வந்து வாழும் வடவர்களாவது, தங்கள் இருசாராருக்கும் பொதுவாக இந்தியைப் பொது மொழியாக்கித் தருதல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்; அதற்காகவேதான் "நாங்கள்" இந்தியைப் பொது மொழியாக்க முயன்று வருகின்றோம் என்பதாக நாளது வரை எந்த இந்தி இயக்கத் தலைவர்களாவது கூறவில்லையே. மற்று அத்தலைவர்கள் இந்தி மொழியைப் பொதுமொழியாக்கினால் இந்திய மக்களுக்கு நன்மைகள் பல உண்டாகுமென்று தங்கள் கருத்திற் பட்டதாகவும், அதனாலே தான் தாங்கள் இந்தியைப்: பொதுமொழியாக்க முயன்று வருவதாகவுந் தானே கூறினார்கள்—கூறுகின்றார்கள். இதனால், இத்தலைவர்களின் இவ் ஒரு செயலானது பொதுமக்களின் விருப்பத்திற்கு முற்றிலும் மாறுபட்ட வேண்டாக்கிளர்ச்சி என்பது புலப்படவில்லையா?

இவ்வாறாக எவராலும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படாத ஒரு பயனுமற்ற கிளர்ச்சியாகிய இந்திக் கட்டாயக்கல்வி முறையை தோழர் முத்துரங்கம் போன்றார் சிலர் தம் தலைமீது தூக்கிச்சுமந்து திரிவதன் காரணம், அவர்களுக்கு இதுபோன்ற பயனற்ற துறைகளில் இறங்கித் தம் காலத்தையும் முயற்சியையும் பொதுமக்களின் பணத்தையும் செலவு செய்வதைத் தவிர, வேறு மக்களுக்கு நன்மைகள் ஏற்படக்கூடிய துறைகளில் இறங்கிப் பாடுபடுவதற்குரிய ஆற்றலும் ஆர்வமும் இல்லையென்று கருதுவதா, அல்

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi Street. Conjeeveram.